Registered as a Newspaper

பக்கங்கள்: பதின்னான்கு

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 16 ஞாயிற்றுக்கிழமை (30-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:55

## தமிழ்க் கட்சிகளிடையே இணக்கம் ஏற்படுத்த முயற்சி!

### பெப். 8 இல் நாடாளுமன்றத்தில் சந்திப்பு

கொழும்பு,ஜன.30

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றினைக் காணும் விடயத்தில் தமிழ்க் கட்சிகளிடையே உள்ள வேற்றுமைகளைக் களையும் முயற்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கானசகல ஏற்பாடுகளையும் கட்சி மேற்கொண்டிருப்பதாகவும் ;

தமிழ்க் கட்சிகளிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்காக அடுத்த மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றில் பேச்சு நடத்தப்பட உள்ளது என்றும் -

இந்தப் பேச்சுக்களில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றி முக்கியமாக ஆராயப்படும் என்றும் -

முஸ்லீம் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான ராஹுக் ஹக்கீம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குதீர்வு காணும் விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று ஐ.தே.க. அறிவித்ததை அடுத்து தமிழ்க் கட்சிகளிடையே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முஸ்லிம் காங்கிரஸ் முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-6-க)

## நீலனின் நினைவு நிகழ்வுக்காக முன்னாள் பிரதமர் குஜ்ரால் வருகை

### ஜனாதிபதியையும் சந்திப்பார்

கொழும்பு,ஜன.30

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீலன் திருச்செல்வத்தின் நினைவுதின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவே அவர் இங்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் 6 தினங்கள் இங்கு தங்கி இருக்கும் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் மூத்த அரசியல் பிரமுகர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று கொழும்பு வந்து சேர்ந்த குஜ்ரால் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டார். ,

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மூன்றாம் தரப்புக்களின் தலையீடு தேவையில்லை என்று அவர் செய்தியாளர் மாநாட்டில் கூறியதாக ரூபாவாஹினி தெரிவித்தது.

'சார்க்' அமைப்பின் ஓர் உறுப்பினராக இருந்து இலங்கை ஆற்றும் பணிகள் பெரிதும் பாராட்டப்பட வேண்டும். இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடை



(14 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப் பெண் கைதிகள் மீது வெலிக்கடையில் தாக்குதல்!

## சிறை ஆஸ்பத்திரியில் மூவர் நேற்று அனுமதி

கொழும்பு ,ஜனவரி 30

**வெலிக்கடைச் சிறையில் பெண் கைதிகள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் மூன்று பெண்கைதிகள் காயமடைந்து வெலிக்கடையில் உள்ள சிறைச் சாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

**சிங்களக் கைதிகளும் சிறைக் காவலர்களும் இவர்களைத் தாக்கியதாக தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஏ.விநாயமூர்த்தி மனித உரிமைகள் கமிஷனுக்கும் நீதி அரசமைப்பு விவகார அமைச்சருக்கும் முறையிட்டுள்ளார்.**

கைதிகள் தண்ணீர் எடுக்கும் இடத்தில் தமிழ்ப் பெண் கைதி ஒருவருக்கும் சிங்களப் பெண்கைதி ஒருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டதாகவும் இதனை அடுத்தே தமிழ்ப் பெண்கைதிகள் தாக்கப்பட்டனர் என்றும் -

இத்தகைய தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் விநாயகமூர்த்தி மேலும் கேட்டுள்ளார்.

இம்மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல்களில் 42 தமிழ்க்கைதிகள் காயமடைந்ததும் இருவர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

(இ)

### பகிஷ்கரிக்க கோரி துண்டுப்பிரசுரம்

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி பிரியா ஸ்ரீஸ்கந்தராஜா விடுவிக்கப்படும் வரை பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு மாணவர்களைக் கோரும் துண்டுப் பிரசுரங்கள் நேற்று யாழ். நகரிலும் ஏனைய இடங்களிலும் விநியோகிக்கப்பட்டன.

'சகல பாடசாலை மாணவர் ஒன்றியம்' என்னும் பெயரில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

மேற்படி மாணவியை விடுவிக்கக்கோரி கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களும் வேறு சில பாடசாலைகளின் மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது தெரிந்ததே.

நாளை திங்கட்கிழமை முதல் சகல பாடசாலைகளிலும் இப்பகிஷ்கரிப்பு இம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-6133)

### உரும்பிராய் தாய், பிள்ளைகள் கைது:

## நகர சபைக் குண்டுவெடிப்புடன் தொடர்பு எனச் சந்தேகமாம்

கொழும்பு,ஜன.30

கடந்த மாதம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காகவே உரும்பிராயைச் சேர்ந்த தாயும் அவரது இரு பிள்ளைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக சில செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா வளர்மதி அவரது பிள்ளைகளான எஸ்.பிரியா எஸ்.வினோத் ஆகியோர் கடந்த 25ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த இரசகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பது தெரிந்ததே.

நகரசபைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் -

மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

### மத்திய மாகாணத்தில்

## நாசகாரச் செயல்களை தடுக்க தனியான பொலீஸ் பிரிவு

மத்திய மாகாணத்தில் புதிய பயங்கரவாத எதிர்ப்புப் பொலீஸ் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இந்தப் பிரதேசங்களில் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதை அடுத்து இந்தப் புதிய பொலீஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிறிசேனஹெரத் தெரிவித்தார்.

இதேவேளை -

மலைநாட்டில் நாசகார வேலைகளுக்கு முயற்சி செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ-6)

### மொறக்கொட்டாஞ்சேனையில்

## பிரதான வீதியோரம் மதில்களை அகற்றிட படையினர் பணிப்பு

மட்டக்களப்பு,ஜன.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொறக்கொட்டாஞ்சேனையில் பிரதான வீதியோரம் உள்ள வீடுகளின் மதில்களையும் வேலிகளையும் உடனடியாக அகற்றிவிட வேண்டும் என்று படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மொறக்கொட்டாஞ்சேனை இராணுமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மதில்களின் ஓரங்களிலும் வேலிகளின் மறைவுகளிலும் இருந்து புலிகள் தம்மைத் தாக்குவதாகவும் -

எனவே உடனடியாக அவற்றை அகற்ற வேண்டும் என்றும் -

படையினர் உத்தரவிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். மதில்களையும் வேலிகளையும் அகற்றினால் தமது வீடுகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் வீட்டில் உள்ள பயன்தரு மரங்களை அழிப்பதற்கு கால்நடைகளுக்கு ஏதுவாகி விடும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஐ-6)

### விபத்தில் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ். நகரப் பகுதியில் பலாலி வீதி - பருத்தித்துறை வீதிச் சந்தியில் சைக்கிளில் வந்த இராணுவச் சிப்பாய் மீது இராணுவ டிரக் மோதியதில் சிப்பாய் படுகாயமடைந்தார்.

நேற்று மால 6.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த சிப்பாய் மயக்கமடைந்த நிலையில் படையினரால் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

## சாரதாம்பாள் கொலையாளிகளை கைதுசெய்ய ஆதாரங்கள் இல்லை!

### விசாரணைக்குழு கைவிரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

புங்குடுதீவு அந்தணப் பெண் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக் கொலை தொடர்பாக போதிய ஆதாரங்கள் கிடைக்காததால் சந்தேக நபர்கள் எவரையும் கைது செய்ய முடியாமல் இருப்பதாக இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் புங்குடுதீவுப் பகுதியில் 12 பொது மக்களும், எட்டு கடற்படையினரும் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளின் போது கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான தகவல்களோ, தடயங்களோ எதுவும் கிடைக்கவில்லை என்றும் -

சம்பவதினம் சாரதாம்பாளின் வீட்டுக்கு அருகில் உள்ள முகாமில் குறைந்த எண்ணிக்கையான கடற்படையினரே கடமையில் இருந்தனர் என்றும் -

இவர்கள் அனைவரும் விசாரிக்கப்பட்ட போதும் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான சரியான விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் -

அந்த அதிகாரி கூறினார்.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் கீழ் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் யாழ். பொலீஸ் நிலைய பொலீஸாரின் உதவியுடன் புங்குடுதீவில் புலன்விசாரணைகளை நடத்தினர்.

(ஐ-5)

## வவுனியா பிரதம தபாலகம் நாளை முதல் வழமைக்கு!

வவுனியா,ஜன.30

வவுனியா பிரதம தபாலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து ஸ்தம்பிதம் அடைந்திருந்த வவுனியா தபால் சேவை நாளை முதல் வழமைக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடிப்பினால் சேதமடைந்த கட்டடத்துக்கு பின்பக்கமாகவுள்ள மாவட்ட அஞ்சல் அதிபர் அலுவலகத்தில் வைத்தே தபாலக பணிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை வவுனியாவிலுள்ள படையினர் தமது உறவினர்களுக்கு பணம் அனுப்புவதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(இ-5-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கடலில் விடப்பட்ட வள்ளங்களை கரைக்கு எடுத்துச் செல்ல அனுமதி

குருநகர்,ஜன.30

குருநகர் இறங்குதுறைப் பகுதிக் கடலில் தம்மால் விடப்பட்டிருந்த மீன்பிடி வள்ளங்களை அங்கிருந்து கரைக்கு ஏற்றி பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் வேலையை குருநகர் மீனவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

குருநகர் இறங்குதுறைக் கடலில் 300 வள்ளங்கள் வரை உள்ளதாகவும் -

குடாக்கடலில் மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதால் இந்த வள்ளங்களை விரும்பியவர்கள் கரைக்கு ஏற்றி பாதுகாப்பான இடங்களில் வைக்க அனுமதி தருமாறும் -

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் சின்னக்கடை இராணுவ முகாம் பொறுப்பாளரிடம் கோரிக்கை விட்டிருந்தது.

அனுமதி கிடைத்ததை அடுத்தே வள்ளங்கள் கரைக்கு ஏற்றப்படுவதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்தது.

# இந்து மதகுருவின் வீட்டில் ஓடு பிரித்து சங்கிலி அபேஸ்!

## நல்லூர் பகுதியில் சம்பவம்

வலி.கிழக்கு,ஜன.30

ஆலயக்குருக்கள் ஒருவரின் வீட்டில் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெண்ணின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியுள்ளனர்.

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள ஆலயக்குருக்கள் ஒருவரின் வீட்டிலேயே நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அருகேயுள்ள ஆலயத்திலும் பொது மண்டபத்திலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அத்தருணத்தைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டுக்குள் இறங்கி துணிகரமாக சங்கலியை அபகரித்துள்ளனர்.

அண்மையில் இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய பிரதம குருக்களின் வீட்டிலும் நகைகள் சூறையாடப்பட்டமை தெரிந்ததே.

நல்லூர், கல்வியங்காடுப் பகுதிகளில் மீண்டும் இத்தகைய திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. (ஐ-5-180)

## வெற்றிலை கொடியில் நோய்

நெல்லியடி,ஜன.30

வடமராட்சிப் பகுதியில் உள்ள வெற்றிலைக் கொடிகளில் ஒருவித நோய் ஏற்பட்டிருப்பதனால் வெற்றிலைச் செய்கையாளர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெற்றிலையின் விலையும் அதிகரித்துள்ளது. (இ-109)

# யாழ். ஆசிரியருக்கு பதவி உயர்வு சுற்றறிக்கைப்படி வழங்கவில்லை

## தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜன.30

ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கல் தொடர்பான சுற்றறிக்கையின்படி யாழ். மாவட்டத்திலுள்ள தகுதியான ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு அதற்கான சம்பளங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சு செயலாளருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள 'பக்ஸ்' செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த பக்ஸ் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்பதவி உயர்வின் போது மூன்று வருட கஷ்டப் பிரதேச சேவை அவசியமென வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் குறிப்பிடப்பட்ட விடயத்தில் தெளிவின்மை இருப்பது ஆசிரியர் மத்தியில் விரக்தி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆசிரிய சேவையின்போது பட்டம்பெற்ற ஆசிரியர்களைப் பட்டதாரி சேவைக்கு உள்வாங்குவதுடன் உரிய சம்பளமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

* பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்று ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்து நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி உரிய சம்பளமும் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
* தொண்டர் ஆசிரியர்களாக இருந்து 1992இல் தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்று தொலைக் கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சியை முடித்தவர்களுக்கும் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு உரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்.
* அதிபர் ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாத சம்பள நிலுவைகளை வழங்க வேண்டும்.
* தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சியை முடித்தும் இதுவரை சான்றிதழ் கிடைக்காதவர்களுக்கு சான்றிதழ் பெற்றுக்கொடுக்க ஆவன செய்தல் வேண்டும்.
* தொலைக்கல்வியை முடித்தும் பல வருடங்களாக முடிவுகள் கிடைக்காதவர்களுக்கு முடிவுகளைப் பெற்றுக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.
* அதிபர்களுக்கான இடமாற்றம் குறிப்பிட்ட திட்டத்திற்கமைவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்த ஆவன செய்தல்.
* தீவகம் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் நீண்ட காலம் கடமையாற்றியவர்களுக்கு இடமாற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

இலங்கை ஆசிரிய சேவையில் உச்ச சம்பளங்களைப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வுகளை தாமதிக்காது வழங்க வேண்டும்.

இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# விஞ்ஞானசங்க கண்காட்சி நேற்று மத்திய கல்லூரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ். விஞ்ஞான சங்கத்தினால் மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் கண்காட்சிப் போட்டி நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பமான இந்தப் போட்டியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட பிரதிநிதி ரெயினர் பிரவெண்வெல்ட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ். மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகள் பலவும் இந்தப் போட்டியில் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு தயாரிக்கப்பட்ட ஆக்கங்களைக் காட்சிக்கு வைத்திருந்தனர்.

இதில் மனிதனின் உடற்பாகங்களின் தொழிற்பாடுகள், குடாநாட்டின் கடல் வளங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், சூழல் மாசடைதல் பற்றிய விளக்கங்கள், சூரிய அடுப்பு, இலத்திரனியல், விமான இயக்கம், முப்பரிமாண தரை அமைப்புக்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய காட்சிப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பெருமளவில் சென்று இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

கண்காட்சி இன்றும் காலை 9.00 மணி முதல் பிற்பகல், 4.00 மணி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை நேற்று (29.01.2000) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் ஏகபுத்திரனும், யோகரத்தினத்தின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு விசாலாட்சி தம்பதியினரின் மருமகனும் வள்ளிப்பிள்ளையின் சகோதரனும் நந்தகுமார் (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், அச்சுவேலி), நடனகுமார் (லண்டன்), சிவகுமார் (கால்நடை வைத்தியர் அலவலகம், கோப்பாய்), பகீரதி (கண்ணகி அச்சகம், அச்சுவேலி), சாந்தகுமார் (சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் வாசுகியின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.01.2000) சனிக்கிழமை நடைபெற்று நீர்வேலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.நந்தகுமார்
(மகன்)

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி*

(73203)

## பிரம்மஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் திருசெந்தில்நாதக் குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு, வல்வெட்டித்துறை சுந்தரப்பெருமாள் ஆலயம்)

துன்னாலை மத்தியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்களின் மகன் திருசெந்தில்நாதக்குருக்கள் நேற்று (29.01.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரி அம்மாவின் அன்புக்கணவரும் சரகஷ்த்திரநாதக் குருக்கள், பகீரதநாதசர்மா, திருமதி மஞ்சரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (30.01.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பியான்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
சரகஷ்த்திரநாதக் குருக்கள்
(மகன்) (C/10865)

**SHAMROCK**

A/L 2001, 2002

* இந்து நாகரிகம்

Mr.நித்தியானந்தன B.A.
(சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்)

* கிறீஸ்தவம்

Mrs. A.மல்லிகா, B.A.

* Gr. 5 முதல் O/L வரை.
* Gr. 10 புதிய பாடத் திட்டம் (புவியியல், அபிவிருத்தி, ஆங்கில, தமிழ் இலக்கியம் உட்பட)

(C/10859)

ஆரம்பமாகிவிட்டது!

**LOGIC**

துரிதமீட்டல்
&
Paper Class

A/L 1999/2000

எஸ். எஸ். மனோகரன்

சனி - பகுதி II
ஞாயிறு - பகுதி II
திங்கள் - பகுதி I

**BEACON**

வெலிங்டன் சந்தி,
யாழ். (73199)

## விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- பொ.ச.ஞானசீலன்
புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி. (C/10864)

# விண்ணுலகில் 8 ஆம் நாள் கண்ணீர் பூக்கள்

மண்ணில்
03
-
04
-
1954



விண்ணில்
23
-
01
-
2000

## அருட்திரு. இ.யோ.அருமைநாயகம்

அர்ப்பணமாய் 20.07.1979

அருள்நிறை அருமையின் அருமை இயம்புதல் இயலுமோ அன்பே எம் அருமை ஆருயிர்க்கும் நீரே அருமை - அம்மாவிற்கு அருமை நீர் ஆயர்க்கும் நீரே அருமை இதயங்களிற்கு நீர் அருமை ஈகைக்கு நீர் நாயகமே ஏன் மறைந்தாய் எம் அருமைத் தந்தாய்?

ஏட்டில் உன் நாமம் பதியப்படவா ஏட்டில் என்ன எம் இதயத்தில் உம்மை பொறித்தோமே பெற்றெடுத்த பிள்ளையாய் பேணியவர் பேதலிக்க - உடன் பிறவாத் தங்கையர் நாம் தவித்திருக்க - பச்சிளம் பாலகன் டெரிக்கின் பாதர் மாமா எனும் பாசமொழியும் மறந்தீரோ கண்ணில் உம் சிரிப்பும் கருணைமிகு உம் இதயமும் காற்றாகி கருகியதோ!

காலன் தான் உமை அழைத்தானோ - அன்றேல் கடவுள் தான் உம்மை அணைத்தாரோ - யாம் அறியோம் காற்றுள்ளவரை காதில் ஒலிக்கும் உங்கள் சிரிப்பு - காலம் உள்ளவரை நிலைக்கும் உங்கள் அன்பு மனம்!

உம் பிரிவால் துயருறும்
அன்புள்ளங்கள்,
பூவிலிங்கம் குடும்பத்தினர்.

*இல.85, தேவாலய வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(73162)

# கண்ணீர் அஞ்சலி

பளை பிரதேச செயலகத்தின் அல்லிப்பளை கிராம உத்தியோகத்தர் யா. வேதநாயகத்தின் அன்புத் தாயார்

## யாக்கோப்பு விக்ரோரியா

25.01.2000 ஆம் திகதி, காலமாகிய செய்திகேட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பளை பிரதேச செயலர்*
*பணிமனை உத்தியோகத்தர், ஊழியர்கள்,*
*கிராம உத்தியோகத்தர்கள்.*

(73217)

# தனங்களப்பு விவசாயிகளை அறுவடைக்கு அனுமதிக்குக!

## கூட்டணி எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 30 சாவகச்சேரி, தனங்களப்புப் பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தமது நெல்லை அறுவடை செய்ய அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களின் இழப்பீட்டுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனங்களப்புப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் தனங்களப்புப் பகுதியில் உள்ள சுமார் நானூறு விவசாயிகள் கடந்த ஒரு மாத காலமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள அந்த மக்கள் பட்டினி நிலையில் உள்ளனர்.

அவர்களின் நெல்லை அறுவடை செய்யப் படையினர் அனுமதிக்காததால் அவர்கள் பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர். எனவே அறுவடை செய்ய விவசாயிகளை அனுமதிக்குமாறு அந்தப் பிரதேசப் படை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விட வேண்டும். இல்லையேல் அவர்களின் இழப்பீட்டுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் — என்றுள்ளது. (ஜ-3)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம். ஜன 30 யாழ்.குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 28 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சாவகச்சேரி

(129914ஏ), (129937ஏ), (129939ஏ), (131326ஏ), (123668ஏ), (123668பி), (123668சி), (123668டி), (123668ஈ), (123668எவ்), (123668ஜி), (126022ஏ), (126034ஏ), (126034பி), (130508ஏ), (130508பி), (130508சி), (134929ஏ), (134929பி), (134933ஏ), (134933பி), (134944ஏ), (125499ஏ).

### கரவெட்டி

(124406ஏ), (124406பி), (124406சி), (124406டி), (125737ஏ), (125737பி), (127757ஏ), (127810ஏ), (129383ஏ), (129383பி), (129435ஏ), (129435பி), )129451ஏ), (129452ஏ), (129460ஏ), (129472ஏ), (129472பி), (129478ஏ), (129506ஏ), (129506பி), (129507ஏ), (129507பி), (129519ஏ), (129522ஏ), (129556ஏ), (129556பி), (129556சி), (129526டி), (129556ஈ), (129561ஏ), (129566ஏ), (129639ஏ), (129639பி), (129639சி), (129696ஏ), (129705ஏ), (129705பி, (129705சி), (129712ஏ), (129723ஏ), (129728ஏ), (129736ஏ), (129736பி), (129752ஏ), (129757ஏ), (129757பி), (129758ஏ), (129764ஏ), (130880ஏ), (130881ஏ, (130908ஏ), (130911ஏ), (130912ஏ), (130920ஏ), (130929ஏ), (130964ஏ), (131007ஏ), (132649ஏ), (132649பி), (132715ஏ), (132715பி), (132789ஏ), (132789பி), (132840ஏ), (132840பி), (132840சி), (132886ஏ), (132947ஏ), (132947பி), (134990ஏ), (134999ஏ).

### பளை

(123710ஏ), (125481ஏ), (129363ஏ), (129363பி), (129364ஏ), (129364பி).

### பருத்தித்துறை

(125768ஏ), (127685ஏ), (127685பி), (127685சி), (127685டி), (127716ஏ), (127814ஏ), (127814பி), (127814சி), (127814டி), (127824ஏ), (127824பி), (127824சி), (127830ஏ), (127860ஏ), (129381ஏ), (129385ஏ), (129385பி), (129388ஏ), (129388பி), (129388சி), (129412ஏ), (129420ஏ), (129420பி), (129433ஏ), (129433பி), (129433சி), 129449ஏ), (129449பி), (129449சி), (129449டி), (129459ஏ), (129479ஏ), (129560ஏ), (129568ஏ), (129568பி), (129649ஏ), (129649பி), (129742ஏ), (129742பி), (129742சி), (129743ஏ), (131030ஏ), (132814ஏ), (132833ஏ), (132833பி), (132835ஏ), (132836ஏ).

## பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், ஜன. 30 உரும்பிராய்ஞானவைரவர் சுவாமி கோயிலில் கடந்த 20 ஆம் திகதி பாலஸ்தாபனம் நடைபெற்றது. திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (ஐ)

## கண் காட்சி

யாழ். ஆறுகால்மடப் பகுதியில் உள்ள கிராம மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள் பட்டினிக்கெதிரான நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் கண்காட்சியும், விற்பனையும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஐயனார் கோவிலடியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக பதில் பிரதேசச் செயலர் எஸ். வேல் முருகோன்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-7)

## பொதுசன மாதாந்த உதவிப்பணம்

நவாலி, ஜன. 30 சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான டிசெம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அப்பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாண மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் குடும்ப சுகாதாரத் தகவல் அனுசரணைக்கல்வி. தொடர்பாடல் சம்பந்தமாக நடத்தப்பட்ட சித்திரப்போட்டி, சுவரொட்டிப் போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டக் காரியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஐ-152)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் வடமாகாண முன்னாள் பிரதிப் பொது முகாமையாளரும் தற்போதைய இலங்கை மின்சார சபை மேலதிக பொது முகாமையாளருமாகிய

திரு. வே. இராஜேந்திரன்

அவர்களின் பாசமிகு துணைவியார்

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்கள் மீளாத்துயில் அடைந்தமையிட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் துன்ப துயரங்களில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

V. M. S. கொன்ஸ்றக்சன்ஸ்

(73192)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் முன்னாள் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளரும் தற்போதைய இலங்கை மின்சார சபை மேலதிக பொது முகாமையாளருமாகிய

திரு. வே. இராஜேந்திரன்

அவர்களின் அன்புப் பாரியார்

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு நாமும் எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

142, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

T. சிவாநந்தினம்
குடும்பத்தினர்.
(73183

## புதிய கலப்பை விற்பனைக்கு கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் புதிய கலப்பை விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுபவர்கள் எமது சங்கத்திற்கு 2000 - 02 - 15 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

தலைவர்,
பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
பருத்தித்துறை.

கூட்டுறவுச்சேவையிலுள்ள
பொது முகாமையாளர்.

26—01—2000

(சி/10853)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சாரசபை, கொழும்பில் மேலதிக பொது முகாமையாளராகக் கடமையாற்றும்

திரு. வே. இராஜேந்திரன் அவர்களின்
அன்பு மனைவி

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களுக்கு

அனலிடை மெழுகாய்
உருகித் தவிக்கும் — எங்கள்
கண்களின் நீரைக்
காணிக்கையாய்ச் சொரிந்து
ஆறாத் துயரில் மூழ்கித் தவிக்கும்
அன்பு நெஞ்சங்களுடன்
நாமும் கரைகின்றோம்.

பீற்றர், மனைவி, பிள்ளைகள்.

61, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

[73188]

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு
10-03-1926

இறப்பு
11-02-1999

சங்கத்தானையைப் பிறப்பிடமாகக்கொண்டு வருக்கச்சார்வெளி பளையை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி கந்தவனம் சற்குணம்**

திதி: 30—01—2000

அம்மா! ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாத உன் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது!

தற்போதைய சூழ்நிலை காரணமாக அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம் சைவச் சிறுவர் இல்லம் சண்டி வீதி, கைதடியில் மதியபோசனம் 12.00 மணியளவில் வழங்கப்படும்.

என்றும் நினைவு கூரும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

த. துரைபரராசசிங்கம்
(வியாபாரி)
கச்சார் வெளி,
பளை.

(73121)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

## இராமலிங்கம் தியாகர் சின்னத்துரை

(7 ஆம் வட்டாரம், நயினாதீவு)

அன்னையின் மடியில்: 04-04-1907

கைலையின் இரியில்: 04-01-2000

நயினாதிவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் இராமலிங்கம் தியாகர் சின்னத்துரை அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டியும் 02 — 02 — 2000 ஆம் புத்தாயிரம் ஆண்டு புதன் கிழமை [ தைத் திங்கள் 19 ஆம் நாள் ] நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் தியாகர், சின்னாச்சி அவர்களின் மூத்த புத்திரனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகமுத்துவின் மருமகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், தையமுத்து சங்கரப்பிள்ளை (ஐ. வி. சங்கம், யாழ்ப்பாணம்), அன்னம்மா, செல்லமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற விசுத்தி, காசிப்பிள்ளை, சந்தையா சங்கரப்பிள்ளை, இராமலிங்கம் (வர்த்தகர் கொழும்பு), மாணிக்கம் (அடைவு கடை, நயினாதீவு), குமாரசாமி (மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்), தங்கம்மா, பராசக்தி, பொன்னம்மா, திருமதி பாக்கியம் பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பாலசுந்தரம் சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற நெடுஞ்சாலை அ. வி. திணைக்களம், யாழ்ப்பாணம்), வரலெட்சுமி, காலஞ்சென்ற திலகவதி, நாகலெட்சுமி, குணலெட்சுமி ஞானப்பிரகாசம் (அதிபர். கூமாங்குளம், த. க. பா. வவுனியா) ஆகியோரின் தகப்பனாரும், சண்முகராசா (முன்னாள் கிருஷ்ணபவான் பங்காளர் யாழ்ப்பாணம்) லோகாம்பிகை, சோமசுந்தரம் (ஸ்ரீ நியூ தாமோதர விலாஸ் கொழும்பு), கேசவநாதன் (முகாமையாளர், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்) மஞ்சுளா (நெக்ரா கபே, வவுனியா) ஆகியோரின் மாமனாரும், பகீரதன் கலைவாணி (ஜேர்மனி), முருகபத்மராஜா சந்திரவதனி (ஜேர்மனி), தர்மகுலராஜா செல்வகுமாரி (பிரான்ஸ்), மனோகரன் சத்தியவாணி (பிரான்ஸ்), சுமந்திரன் (லண்டன்), ஜெயகுமரன் (மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களம், கொழும்பு — 5) சுசித்திரா, நந்தகுமரன் (பொறியியலாளர், எட்வேட் கிறிசியன் (அன்கோ) கம்பனி, கொழும்பு), சுதர்சினி, அநுரகுமரன் (4 ஆம் வருட மாணவன் மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), விஜேகுமரன் (இறுதி ஆண்டு பொறியியல்பீடம், பேராதனை), நித்தியராஜா சாந்தலெட்சுமி (ஜேர்மனி), சத்தியபாமா (கொழும்பு), பாஸ்கரன் (பூபாலசிங்கம் புத்தகசாலை செட்டித்தெரு, கொழும்பு), ஸ்ரீகரன் பூபாலசிங்கம் புத்தகசாலை, வெள்ளவத்தை), சாவித்திரி (நயினாதீவு மகாவித்தியாலயம்), சுதாகரன் (நயினாதீவு க. கு. வித்தியாலயம்), கெங்காதரன் (ஹொலண்ட்), ஆரணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும் சாயிரதன் (ஜேர்மனி), சாயிராஜா (ஜேர்மனி) கலைரதன் (ஜேர்மனி), ஸ்ரீஹரி (ஜேர்மனி), ஸ்ரீதாஷ் (ஜேர்மனி), ஸ்ரீராஹவி (ஜேர்மனி), நிஷாந்த் (பிரான்ஸ்), விஷாந்த் (பிரான்ஸ்), மாதங்கி (கொழும்பு), சங்கரி (கொழும்பு). லோகப்பிரியன் (ஹற்றன்), அர்ஜிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:

திரு. வே.மு. சண்முகராசா (மூத்த மருமகன்)
7 ஆம் வட்டாரம், நயினாதீவு.
(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் 1960 ஆம் ஆண்டின் ஆரம்பகால உறுப்பினர், நயினாதீவு ஸ்ரீ பகவான் சத்திய சாயி பாபாவின் பஜனை நிலையப் பொருளாளர்.)

[73054]

## செயலகத்துடன் தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30

கப்பலிலிருந்து இறக்கப்படும் பொருள்களை ஏற்றி வருவதற்குப் பதிவு செய்த லொறிகளின் உரிமையாளர்களைக் கப்பல்கள் பருத்தித் துறைக்கு வந்தவுடன் புனர் வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தொடர்பு கொள்ளத் தவறியவர்களின் லொறிகள் பொருள்களை ஏற்றிவருவதற்கு அனுமதிக்கப்படமாட்டா என்று யாழ். மாவட்ட தலியார் பாரஊர்தி கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-5)

## மாணவர்களுக்கு உதவ நிதி

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் வன்னியில் வசிக்கும் வறிய மாணவர்களுக்கு உதவும் பொருட்டு அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையை மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் நிதி வன்னி வாழ் வறிய மாணவர்களின் கல்வி மற்றும் உளநல ஆற்றலை விருத்தி செய்யும் வகையில் பயன்படுத்தப்படும் என்று பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்

(ஐ-8)

## சீருடை விநியோகம்

நீர்வேலி, ஜன.30

வலி. கிழக்கு பிரதேச சபை ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன. தொழில்நுட்ப உத்தியோகத்தர், வருமான மேற்பார்வையாளர், ஆயுர்வேத உத்தியோகத்தர், அலுவலக உதவியாளர், காவலாளிகள் போன்றோருக்கு வெவ்வேறு நிறங்களில் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

(ஐ-110)

## சிமெந்து விலை குறைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து யாழ். மாவட்டத்தில் சிமெந்தின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாகக் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபன யாழ். கிளை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் ஒரு பைக்கற் சிமெந்து 520 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. முதலாம் திகதியிலிருந்து 510 ரூபாவுக்குச் சிமெந்தினைத் தாராளமாகப் பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

## உ. கிழங்கு அறுவடை ஆரம்பம்

அரியாலை, ஜன. 30

யாழ். மாவட்டத்தில் பயிரிடப்பட்ட உள்ளூர் உருளைக் கிழங்கு அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஒக்ரோபர் மாத இறுதிப் பகுதியில் பயிரிடப்பட்ட உருளைக் கிழங்கு தற்போது அதன் பூரண விளைவுக்கு முந்தியே விவசாயிகளால் அறுவடை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை செய்யப்படும் இந்த உருளைக்கிழங்கு திருநெல்வேலிச் சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது.

ஒருகிலோ உருளைக்கிழங்கு 60ரூபா முதல் 70ரூபாவரை விற்கப்படுகின்றது.

(ஐ-17)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 — 03 — 1940



மறைவு 21 — 12 — 1999

## அமரர் சிவகுரு இராமநாதன்

(இளைப்பாறிய கட்டடப் பரிசோதகர்)

நெஞ்சம் விட்டகலாப் பெரியதம்பி!
விஞ்சி நின்றாய் உன்னரிய பண்பினாலே
நெஞ்சமெல்லாம் கலங்குதையா உன் பிரிவால்
தஞ்சமினிஎமக்கு யாருளரோ?
எமது குடும்ப உறுப்பினரின் துயரச் செய்தியறிந்து

ஓடோடி வந்து அனுதாபம் தெரிவித்த அனைவர்க்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

க. சின்னராசா (மைத்துனர்),
குடும்பத்தினரும்,
தாய், சகோதரர்களும்.

'ஈஸ்வரவாசம்',
மயிலணி,
சுன்னாகம்.

(73166)


## யாழ். வைத்தியசாலையின் ஆண்டு நிறைவு விழா (30 - 01 - 2000)

எமது அன்புக்கினிய வாடிக்கையாளருக்கு மனமார்ந்த நன்றிகள்

"இலவச வைத்திய பரிசோதனை" மட்டும்

31-01-2000 — 05-02-2000 வரை

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் (O.P.D) அனைவருக்கும் இலவச வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

எமது சேவைகள்:

- ★ கண் (கற்றக்) சத்திர சிகிச்சையும், வைத்திய ஆலோசனையும்.
- ★ மகப்பேற்று (V.O.G) மருத்துவ நிபுணரின் சத்திர சிகிச்சையும் ஆலோசனையும் (DNC LRT) (கருத்தடை)
- ★ காது, மூக்கு, தொண்டை (ENT) சத்திர சிகிச்சையும், ஆலோசனையும்.
- ★ பொதுச் சத்திர சிகிச்சையும் (SURGEON) ஆலோசனையும்.
- ★ பொது மருத்துவத்துறை (PHYSICIAN) நிபுணரின் நிபுணத்துவ ஆலோசனையும், தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதியும்.
- ★ பல் சத்திர சிகிச்சையும் ஆலோசனையும்.
- ★ தோல் வைத்திய நிபுணரின் நிபுணத்துவ ஆலோசனை.
- ★ குழந்தை வைத்தியரின் (PAEDIATRICIAN) நிபுணத்துவ ஆலோசனை
- ★ தொற்று நீக்கப்பட்ட அதி உச்ச பாதுகாப்பான, குளிரூட்டப்பட்ட சத்திர சிகிச்சை கூடம்.
- ★ முழுநேர தொடர்ச்சியான MBBS வைத்தியரின் இரவு - பகல் வெளிநோயாளர் (O.P.D) பிரிவு.
- ★ வைத்திய விடுதி (WARD)
- ★ ஈ. சி. ஜீ (E.C.G)
- ★ நெபுலைசர்.
- ★ ஆய்வு கூடம் (LAB)
- ★ மருந்தக வசதி.
- ★ போக்குவரத்து வசதி.
- ★ வைத்திய, தாதியரின் அன்பான உபசரிப்பு, பராமரிப்பு, கனிவான வார்த்தை.

உங்கள் ஆரோக்கியத்துக்காக இரவு-பகல் சேவையாற்றி உங்கள் அபிமானத்தையும் நன்றியையும் பெற்று வீறுநடை போடும்

யாழ் வைத்தியசாலை
284, பலாலி வீதி, கந்தர்மடம்.
T.P/ FAX 3188

(சி/ 10841)

உதயன்

## என்ன பயன்?

மட்டக்களப்பு மற்றும் அம்பாறைமாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதற்குப் ''பாஸ்'' பெற வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதனை ஆட்சேபித்து மட்டக்களப்பில் நேற்று முன்தினம் முழு அளவில் ஹர்த்தால் ஒன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இராணுவத் தரப்பினர் இடைஞ்சல் செய்ய எத்தனித்த போதிலும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஹர்த்தால் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது.

தமிழ் மக்கள் தாம் வாழும் பிரதேசத்திலிருந்து வெளி மாவட்டம் ஒன்றுக்குச் செல்வதற்கு வெளிநாட்டவர்களைப் போல, ''பாஸ்'' அல்லது பாதுகாப்பு அனுமதி என்ற ''விஸா'' எடுப்பதற்கு, இப்போது தான் புதிதாக நிர்ப்பந்திக்கப்பட உள்ளார்கள் என்பதல்ல.

''பாதுகாப்புக் காரணம்'' என்ற நியாயப்படுத்தும் ''முத்திரை'' குத்தப்பட்டு யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு வாழ் தமிழ் மக்கள் எல்லோரும் ''விஸா'' பெற்றே வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டும் என்று ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளது.

தான் பிறந்த யாழ்ப்பாண மண்ணுக்கு அந்நியனைப் போன்று அரசாங்கத்தின் ''விஸா'' பெற்றுச் செல்ல மாட்டேன் என்று முழக்கம் செய்தவர் அமரர் குமார் பொன்னம்பலம். அந்த விதிக்கு — கட்டுப்பாட்டுக்கு — எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அரசாங்கம் தமிழர்களை வெளிநாட்டவர்களைப் போல நடத்துவதை சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டினார் அவர்.

அப்போதெல்லாம் தமிழ்க் கட்சியினர் கைகட்டி, வாய் பொத்தி மௌனிகளாக இருந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து ஒருவர் முக்கிய அலுவலாகச் சென்று, விமானப் பயணத்துக்கெனக் குறிப்பிடப்பட்ட திகதியில் திரும்பி வர முடியாவிடில், மீண்டும் கொழும்பில் பாதுகாப்பு அனுமதி பெற்றே இங்கு வரலாம்.

இவ்வாறாக சொந்த அலுவல்களைச் செய்வதற்குள்ள சுதந்திரம் கூட தமிழர்களுக்கு மறுக்கப்பட்டது தமிழ்க் கட்சியினருக்குத் தெரியாதா? ஆரம்பத்திலேயே இந்தப் ''பாஸ்'' முறைக்கு அவை எதிர்ப்புகாட்டி அதனை இல்லாமற் செய்ய போராட்டம் நடத்தியிருக்க வேண்டும்.

அவர்கள் மௌனமாகப்பார்த்துக் கொண்டிருந்ததால்

அரசாங்கம் தமிழருக்கான ''விஸா'' விதியை மாவட்டம் மாவட்டமாக இப்போது விஸ்தரித்து வருகிறது. அரசாங்கம் தனது இந்தக் கட்டுப்பாட்டை நீக்காது என்று தெரிந்த போது, நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தொடர்ந்தாவதுநியாயம் கேட்டுப் பார்த்திருக்கலாம். அதனையும் செய்யவில்லை.

அமரர் குமார் பொன்னம்பலம் தொடர்ந்த வழக்கில் நாட்டின் ஒரு பகுதியில்இருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வதற்கு ''பாஸ்'' பெறுமாறு பிரஜைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்று சட்டமா அதிபர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அரசு மீண்டும் புதிது புதிதாக சட்டத்துக்கு எதிராகச் செயற்படத் துணிகிறது. அவசர காலச் சட்டத்தைத் துணைக்கு இழுத்தே அரசு இத்தகைய கட்டுப்பாடுகளை நிலை நிறுத்த முனையலாம். அந்தச் சட்டம் நிறைவேற ஒத்துழைக்கும் தமிழ்க் கட்சிகள், மக்களைக் கொண்டு ஹர்த்தால் நடத்துவதால் என்ன நன்மை கிடைக்கப் போகிறது?

# நெற்பயிர் அழிவுக்குக் காப்புறுதி கிடைக்கும்

## மதிப்பீட்டுப் பணி தொடங்கும்

*யாழ்ப்பாணம், ஜன. 30*

வெள்ளத்தினால் ஏற்பட்ட விவசாயப் பயிரழிவுகளுக்கு விவசாயக் காப்புறுதி வழங்குவதற்காக அழிவு தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகள் கமநல சேவை நிலையத்தினால் யாழ். மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான உத்தரவினை கமநல சேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ். சுந்தரேசன் சகல பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும் விடுத்துள்ளார்.

1999 — 2000 ஆண்டு பெரும் போகத்தில் ஏற்பட்ட அழிவு தொடர்பாக இந்த மதிப்பீட்டு வேலைகள் நடைபெறவுள்ளன.

நெற்பயிருக்கு காப்புறுதி செய்த விவசாயிகளின் நெற்பயிர் அழிவுகள் குறித்தே இந்த மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

கீழ்வரும் இடங்களில் குறிப்பிடப்படும் திகதிகளில் இந்த மதிப்பீட்டு வேலைகள் வயல்களுக்கு நேரில் சென்று நடத்தப்படவுள்ளன.

உடுவில் — பெப்ரவரி — 1, தொல்புரம் பெப். — 3, சாவகச்சேரி பெப். — 7, உரும்பிராய் பெப். — 8, அம்பன் — பெப். — 10, புலோலி பெப் — 11. (ஐ-5)

## இலவச மருத்துவ பரிசோதனை

*வடமராட்சி, ஜன. 30*

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் கண், சலரோகம், பல் வைத்திய பரிசோதனைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு கரவெட்டி அரசினர் மத்திய மருந்தகத்தில் வைத்து நடத்தப்படவுள்ளன.

(ஐ-173)

# கொழும்பு உருளைக் கிழங்கு சமாசத்தால் இங்கு தருவிப்பு

*அரியாலை, ஜன. 30*

யாழ். கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட விற்பனை நிலையத்தில் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு விநியோகிக்கப்படுகிறது.

பாவனையாளர்கள் தாராளமாகக் கிழங்கைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங்கத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

'கிரிந்த' கப்பல் மூலம் மாவட்ட விவசாயக் கூட்டுறவு நுகர்வோர் சமாசத்தால் ஒரு தொகுதி உருளைக் கிழங்கு உட்பட அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவரப் பட்டுள்ளன.

கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட இந்தப் பொருள்களை சமாசம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கவுள்ளது என்று சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

*யாழ்ப்பாணம், ஜன. 30*

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் சி. நாகலிங்கம் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மலர் வெளியீட்டுக்கு உரிய ஆக்கங்களை வழங்கிய அனைவரும் இன்றைய நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்படுவதுடன் விருதுகளும் வழங்கப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது.

(க-30)

## ஒடியோ நிகழ்ச்சித் தொடரில்

*யாழ்ப்பாணம், ஜன. 30*

சாந்தானந்தா சரஸ்வதி சுவாமிகளின் விரிவுரைகள் அடங்கிய ஒடியோ நிகழ்ச்சித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5.15 மணி முதல் 6.15 மணிவரை 'தீய ஆவி' எனும் தலைப்பிலான விரிவுரை ஒலிபரப்பப்படும்.

இலக்கம் 48, கோவில் வீதி என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது.

(க)

### உதய வாக்கு

அகிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது.

- காந்தியடிகள்

### நாளை

தை 17

திங்கட்கிழமை

திதி: தசமி

முற்பகல் 9.49 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

முற்பகல் 9.43 வரை.

சுபநேரம்: 12.36—2.06

ராகுகாலம்: 8.06—9.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பஸ் சேவை ஆரம்ப வைபவம்

*தென்மராட்சி, ஜன. 30*

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து கனகம்புளியடி, புத்தூர், சுன்னாகம் ஊடாகச் சங்கானைக்கான பஸ் சேவை (இல. 775) அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பஸ் சேவை ஆரம்ப விழாவில் லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் இ. கமலநாதன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

கழகத் தலைவர் லயன் க. சந்திரகுமாரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர் வீ. எஸ். சொக்கலிங்கம், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ, சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கி. வீரசிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-117)

## நேர்முகப் பரீட்சை

*நவாலி, ஜன. 30*

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 2000 ஆண்டுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

(ஐ-100)

## எதிரொலி...

- இடியன் -

- ● அரசுடன் இணைந்துள்ள ஐ. தே. க. எம். பிக்கள் தம் பதவியை இழக்கக்கூடும்!
- ★ பாவம்! அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டு விட்டவர்கள்!
- ● விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டாம் எனக் கண்டியில் நூற்றுக்கணக்கான பௌத்தகுருமார் ஆர்ப்பாட்டம் செய்தனர்!
- ★ 'பிரித்' ஓதுபவர்கள், தம் தீவிரப் போக்கினால் நாட்டைப் பிரித்தே விடுவார்கள் போலிருக்கின்றதே!
- ● ஈ.பி. ஆர். எல். எவ். விலிருந்து வெளியேற்றப்பட்ட வரதராஜப்பெருமாள் மீண்டும் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.
- ★ பேரிலே ராசாவாக இருந்தாலும் ஆளும் அதிர்ஷ்டம் அவருக்கு இல்லைப்போலும்!
- ● தூக்குத் தண்டனை முறைக்குத் தூக்குத் தண்டனை வேண்டும் என்கிறார் வை. கோ.
- ★ ''சாவே'' உனக்கொரு நாள் சாவு வராதோ? என முன்னர் கண்ணதாசன் கேட்டது நினைவுக்கு வருகின்றது.
- ● பலர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கட்சித் தாவல் சட்டம் கைவிடப்பட்டுவிட்டது!
- ★ வால் பிடிக்கின்றவர்கள் முரண்டுபிடித்தபடியால் வாலறுந்த பட்டமாகி விட்டது அந்தச் சட்டம்!
- ● உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்தவே சமாதான முயற்சிகளில் சந்திரிகா ஈடுபடுகின்றார் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனராம்!
- ★ அதாவது அவர் புதிய ஜனாதிபதியாக அல்லாமல் பழைய சந்திரிகாவாகவே இயங்குகிறார் என்று சொல்கிறார்களோ?
- ● களவாக மின்சாரம் பெறுவோருள் தினமும் பத்துப் பேர் வரை பிடிபட்டுவருகின்றனர்!
- ★ அவர்கள் பெறுவது மின்சாரமல்ல, மின் 'சோ'ரம்!

# இயேசுவின் குரலாக மாறுவோருக்கு பல வழிகளில் சவால்கள் வருகின்றன

''நசரேத் இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை?'' (மாற். 1: 24) என்று தீய ஆவி பிடித்திருந்த ஒருவன் இறைமகன் இயேசுவுக்கு கூறியதை இன்றைய நற்செய்தியிலே பார்க்கலாம். இன்னொரு இடத்திலே தீய ஆவியால் பீடிக்கப்பட்டவன் ''கடவுளின் மகனே, எங்கள் காரியத்தில் ஏன் தலையிடுகின்றீர்?'' (மத். 8: 29;

### ஞாயிறு நற்பிரசாதம்

லூக். 8: 28) என்று கத்துவதையும் காணுகின்றோம். 'இயேசுவே' நீர் சிலுவையில் அல்லவா தொங்க வேண்டியவர்; பிறகு இங்கு உமக்கென்ன அலுவல்? என்றுகூட அந்தத் தீய ஆவி அர்த்தப்படுத்தி இருக்கலாம், எது எப்படியாயினும், இது இறைமகனுக்கே, இறைவனுக்கே இடப்பட்ட சவால் என்பது தெளிவாகின்றது.

செய்வதையெல்லாம் செய்துவிட்டு, 'உமக்கு ஏன் இந்த வேலை? எங்கள் வேலையைப் பார்க்க எங்களுக்குத் தெரியும்; 'எங்கள் வாழ்க்கையில் ஏன் தலையிடுகின்றீர்?' போன்ற வெறுமனே சுய நியாயப்படுத்தல்; 'எனது டிரைவர், எனது கார், எனது பெற்றோல், எனது றோட்' என்ற கொள்கையை விடுத்து, மற்றவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கத்திறந்த மனம் வேண்டும்.

இயேசுவின் குரலாக மாறுகின்றவர்களுக்கு தீய ஆவியின் சவால்கள் பல வடிவங்களிலே வந்து சேருகின்றன, எதிர்ப்புக்களாக மட்டுமல்லாமல் மிரட்டல்கள், வெருட்டல்கள், பயமுறுத்தல்கள், தாக்குதல்கள் எனப் பல வடிவங்களாகப் பரிணமிக்கின்றன. இன்னும் உண்மையைப் பேசுகின்றபோது இவன் வாழத்தெரியாதவன் என்றும்; நீதியைச் செய்கின்றபோது இவனுக்கு ஏன் இந்த வேலை? என்றும்; நேர்மையைக் கடைப்பிடிக்கின்றபோது, இவன் பிழைக்கத் தெரியாதவன் என்றும் முத்திரையிடப்படுகின்ற நிகழ்வுகள், சந்தர்ப்பங்கள் ஏராளம்.

சவால்களைச் சந்திக்கின்றபோது எமது மனநிலை எப்படியிருக்கின்றது? நேர்த்தியானதை தெரிவு செய்யவும், முறையானதைக் கைக்கொள்ளவும், சரியானதைப் பின்பற்றவும் பின்வாங்குகின்றோம். தயங்குகின்றோம். காரணம் எப்படியும் வாழலாம் என்பதனால்தான். எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து, இப்படித்தான் வாழவேண்டுமென வாழ்க்கை என்ற மொழிக்கு வழிமுறை என்ற இலக்கணம் வகுக்கப்பட வேண்டும்.

ஏனெனில், வாழ்க்கையை வடிவமைக்க வழிமுறைகள் கொடுக்கப்பட வேண்டும். தந்தையின் அன்பும், ஆண்டவரின் அருளும், ஆவியின் நட்புறவும் உங்களை நிரப்புவதாக. ✶

அருள்திரு. செ. அன்புராஜ் அ. ம. தி.

# கல்வி, இலக்கியம், பொழுதுபோக்கு என பல தளங்களில் வளர்ந்துவரும் நாடகத் துறை

## அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

இன்று பல்கலைக் கழகங்களில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. விரைவிலேயே பாடசாலைகளிலும் நாடகம் ஒருபாடமாகக் கற்பிக்கப்பட இருக்கிறது. நாம் எல்லோரும் மேடை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா என்று பல ஊடகங்களிலும்நாடகத்தைப் பார்த்து, கேட்டு ரசிக்கின்றோம். எனவே எங்கள் எல்லோரது வாழ்வையும் தொடுகின்ற நாடகத்தைக் கற்பதன் நோக்கத்தை ஆராய்வது பயனுள்ள முயற்சியாகும். நாடகத்தைக் கற்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை எல்லாவற்றையும் ஆராயப் புகுந்தால் கட்டுரை நீண்டுவிடும். இங்கு நான் நாடகத்தைக் கற்கும் பொழுது கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றிச் சுருக்கமாக எழுதுகிறேன்.

### நாடகம் பற்றிய பொதுவான அறிவு

முதலாவது நோக்கம் நாடகம் பற்றிப் பொதுவாக அறிந்து கொள்ளுதல், நாடகம்தோன்றி வளர்ந்த வரலாறு, அது வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு காலகட்டங்களில் எடுத்த வடிவங்கள், அவை ஆடப்பட்டுவந்த முறைகள், குறிப்பாக தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் நாடகத்தின் முக்கிய பிரிவுகள், அதன் பிரதான அம்சங்கள், நாடகத்தின் இன்றைய வளர்ச்சிப் போக்குகள் ஆகியவை பற்றி எல்லோரும் அறிந்திருப்பது அவசியம்.

### நாடகம் நடிக்கப் பழகுதல்

நாடகம் கற்பதன் பிரதான நோக்கம் நடிக்கப்பழகுவது. எல்லோராலும் இலக்கியம் படைக்க முடியாது. ஆனால் எல்லோராலும் நடிக்க முடியும். திறமாக நடிக்காவிட்டாலும் தத்தம் திறமைக் கேற்ப நடிக்கலாம். உலகில் எத்தனையோ விதமான நாடகங்கள் உள்ளன. எல்லாவிதமான நாடகங்களையும் நடிக்கப்பழக வேண்டும். ஆண்கள் மட்டும் நடித்தால் போதாது. பெண்களும் தமக்குப் பொருத்தமான பாத்திரங்களை ஏற்று நடிக்க வேண்டும். புத்தகங்களையும் குறிப்புகளையும் வாசித்தால் மட்டும் நடிப்பு வந்துவிடாது. மேடை ஏறி நடித்தால்தான் நடிப்பு வரும்! தண்ணீரில் இறங்கினால் தானே நீந்திப் பழகலாம்?

பயப்படுபவர்களும் கூச்சப் படுபவர்களும் நடிக்க முடியாது. நாடகம் கற்க வரும் பொழுது பயத்தையும் கூச்சத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டுதான் வர வேண்டும். நாம் படிக்க வந்து விட்டு கூச்சப்பட்டுக் கொண்டு நிற்பது குளிக்க வந்து நின்று கொண்டு குளிருக்குப் பயப்படுவது போன்றது.

நடிப்பு என்பது ஏதோ ஒரு கட்டத்தை எடுத்து நடித்து விட்டுப் போவதல்ல. அது தொடர்ச்சியானது; பலரை உள்ளடக்கியது. மேடையில் நாம் நடித்துக்கொண்டிருக்கின்ற பொழுது அதில் மற்றவர்களும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. நாம் மற்றவர்களுடன் சேர்ந்து நடிக்கப் பழக வேண்டும். எல்லா நல்ல கதை அம்சமும் நிறைந்த பாத்திர வார்ப்பும் கொண்ட ஒரு நாடகத்தை எடுத்து, எல்லோரும் சேர்ந்து அதை நடித்து முடிக்க வேண்டும்.

நடிப்புக்கு எல்லையுமில்லை வரையறையுமில்லை! ஒரே கட்டத்தை, ஒவ்வொரு நடிகரும் ஒவ்வொரு விதமாக நடிப்பர். உங்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியருக்கு எல்லாவிதமான நடிப்புகளும்தெரிந்திருக்காது. சிலர் மேடை ஏறி நடித்திருக்கவே மாட்டார்கள். நாடக நடிப்புப் பட்டறை நடத்துபவர்களும் தங்களுக்கு வாலாயமான நடிப்புகளை மட்டுமே சொல்லித் தருவார்கள். எனவே மாணவர்கள் நன்றாக நடித்துப் பழக வேண்டுமானால் நல்ல திறமைமிக்க நடிகர்கள் நடிக்கும் நாடகங்களைப் பார்க்க வேண்டும். வாயினால் சொல்ல முடியாத பல விடயங்களை நேரில் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். சினிமாப் படங்கள், ரி. வி. நாடகங்கள் பார்த்தும், வானொலி நாடகங்கள் கேட்டும் அந்த ஊடகங்களுக்குப் பொருத்தமான நடிப்பைப் பழகிக் கொள்ளலாம்.

### நாடகம் எழுதப் பழகுதல்

மூன்றாவது நோக்கம் நாடகம் எழுதப்பழகுவது. அதாவது இலக்கியம் படைப்பது.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## மக்கள் முகம்



சுதுமலை கிழக்கு, மானிப்பாயைச் சேர்ந்த செ. செல்வக்குணபாலன் 15 - 12 - 1999 இல் இருந்து உதவிச் சட்ட வரைஞராக நியமனம் பெற்றுள்ளார். நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு தெரிவாகியுள்ள தமிழ்ச் சட்டத்தரணி இவர் ஆவார்.

இவர் செல்லத்துரை பூரணம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்) தம்பதிகளின் புதல்வராவார். தனது ஆரம்பக்கல்வியினை சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை, சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையிலும், உயர்தரக் கல்வியினை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், பட்டப்படிப்பினை கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறையிலும் பயின்று சட்டத்தரணியாக வெளியேறினார். பின்னர் சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு ஆகிய பதவிகளிலும் மனித உரிமைகளின் சங்கச் சட்டத்தரணியாகவும் கடமையாற்றினார். அத்துடன் இவர் தமிழ் மக்கள் நலன்கருதி சட்ட சம்பந்தமான விளக்கங்கள், ஆக்கங்களை, வானொலி, பத்திரிகைகள் மூலம் வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

* * * * *



சுண்டிக்குளி — ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் நீதி அரசமைப்பு இனவிவகார அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் கல்வி கற்கும் காலத்தில் சகலதுறை விளையாட்டுக்களிலும் கல்லூரி அணிக்காக விளையாடியுள்ளார்.

பின்னர் வனபரிபாலன திணைக்களத்தில் பணியாற்றிய போது அகில இலங்கை வனபரிபாலன உதைபந்தாட்ட அணி, கரபந்தாட்ட அணி மற்றும் துடுப்பாட்ட அணி ஆகியவற்றிலும் அங்கம் வகித்து ஆடியுள்ளார். மேலும் அகில இலங்கை அரசாங்க உதைபந்தாட்ட அணியிலும் இரண்டு வருடங்கள் ஆடியுள்ளார்.

உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகியவற்றில் தனித்தனியே ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட முதல்தர போட்டிகளுக்கு நடுவராகக் கடமையாற்றியுள்ளார். அத்துடன் ஈச்சமோட்டை மாதர் கிராம முன்னேற்றச் சங்கம், இளைஞர் கழகம் ஆகியவற்றின் போஷகராகவும் —

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம், ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் — சனசமூக நிலையம், சுண்டிக்குளி நலன் புரிச்சங்கம், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஈச்சமோட்டைக் கிளைக்குழு ஆகியவற்றின் தலைவராகவும் இவர் விளங்குகின்றார்.

யாழ். மாவட்ட பயிற்றுநர் சங்கத்தின் மேலதிக தலைவராகவும் மாவட்ட விளையாட்டு கவுன்சில், யாழ். உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட கபடி சங்கம் ஆகியவற்றின் உபதலைவராகவும் இவர் கடமையாற்றிவருகிறார்.

(ஐ-7)

* * * * *

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பைத் தொழில் இடமாகவும் கொண்ட தம்பி ஐயா ஆறுமுகம் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஓ. ஆர் என். பெனனாந்து முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

திருநெல்வேலி ஆறுமுகம் சீனியர் தம்பிஐயாவின் சிரேஷ்ட புதல்வரும் கொழும்பு மாநகர சபையின் சிரேஷ்ட படவரைஞருமான இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவனும் மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் கட்டட நிர்மாணப் பொறியியல்துறை சான்றிதழுளாரும், யாழ். பல் தொழில் நுட்பக் கல்லூரியின் முன்னாள் புறப் போதனாசிரியரும் இந்து ஆலயங்களின் கட்டட நிர்மாண புனரமைப்பு வேலைகளின் தொழில் நுட்ப ஆலோசகருமாவார்.

(சு-100)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# தமிழ்ப் பணிக்கும் சிறந்த வாழ்வுக்கும் இலக்கணமாகிய கிருஷ்ணபிள்ளை

## அவரது 173 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று

## சகோ. செ. ஜோய் துரைரத்தினம்

கிறிஸ்தவ கம்பன் எனப் பலராலும் பாராட்டப்படும் ஹென்றி அல்பிரட் கிருஷ்ண பிள்ளை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளபாளையங்கோட்டையின் அருகில் கரையிருப்பு என்னும் கிராமத்தில் 1827 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் தமிழறிஞர் சங்கர நாராயன பிள்ளைக்கும் தெய்வநாயகி அம்மையாருக்கும் தலைமகனாகத் தோன்றினார்.

இவர் பக்தி நிறைந்த வைணவக் குடும்பத்தில் பிறந்தார். இவரின் பெற்றோர் இறை நம்பிக்கையும் மதப் பற்றும் உடையவர்கள். குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரிடம் வைணவ சமயக் கோட்பாடுகளையும் பக்திப் பனுவல்களையும் கேட்டறிந்தார். கம்பராமாயணம், திருவாய்மொழி போன்ற வைணவ நூல்களையும் திருக்குறள், ஆத்திசூடி போன்றவற்றுடன் மாணிக்கவாசக தேவரிடம் இலக்கணத்தையும் முறைப்படி கற்றார்.

### சிறு வயதில் தந்தையை இழந்தவர்

கிருஷ்ணபிள்ளை 18 வயதிலே தன் தம்பி முத்தையா பிள்ளையுடன் இணைந்து குருகுலக் கல்வி முறையில் அறிஞர் திருப்பாற் கடனாத கவிராயரிடம் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். இவரது தந்தையின் உடல் நலம் குன்றியதால் 14 வயதுடைய கிருஷ்ணபிள்ளைக்கு 9 வயதுடைய முத்தம்மாளை திருமணம் செய்வித்தார். திருமணமான சிறிது காலத்திலேயே, அவரது தந்தையார் காலமானார். எனவே கவிஞர் சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நடத்திச் சிறந்த புகழ் பெற்றார்.

காலமும் களமும் மனித வாழ்வைத் திட்டமிடுகின்றன. இளமையில் அவர் பெற்ற தமிழறிவும் அவர் தழுவிய கிறிஸ்தவமும் இணைந்த போது, சிறந்த கிறிஸ்தவ நூல்களை இயற்றவும் பதிப்பிக்கவும் தொடங்கினார்.

### பத்திரிகைத்துறையில்

கிருஷ்ணபிள்ளை சென்னையில் இருந்த காலத்தில் கனம் பீற்றர் பேர்சிவல் ஐயருடன் சேர்ந்து 'தினவர்த்தமானி' எனும் இதழுக்கு துணையாசிரியராகவும் ஹென்றிபவர் என்பவருக்கு தமிழாசிரியராகவும் பணியாற்றினார். சில காலம் வேதாகம மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.

1876 இல் பாளையங்கோட்டையிலுள்ள சி. எம். எஸ். கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பின் திருவனந்தரத்தில் மகாராஜர் கல்லூரியில் தலைமைப் பேராசிரியராகவும் பணியாற்றினார் 891 இல் இவரது துணைவர் இறைவன் திருவடியை அடைந்தார். இதற்கு முன் இவ இரண்டு பிள்ளைகள் இறந்தனர். இந்த இழப்புகள் கவிஞரை அதிகமாகப் பாதித்தது 892 இல் சென்னை கிறிஸ்து இலக்கிய சங்கத்தின் தமிழ்ப்பிரிவின் ஆசிரியராகப் பணியாற்றி தரமான கிறிஸ்தவ இலக்கியப் பணிக்கு வித்திட்டார்.

கவியரசர் இணை பால் பக்தியும் நற்பண்பு நிறைந்தவர். அன்னாரின் அருங்குணங்களை அறிவது நம் வாழ்வுக்கு நற்பயன் அளிக்கும். இவரது வாழ்வு முழுவதும் பக்தி நிறை வாழ்வாகும். தம் பிள்ளைகளையும் பக்தி நெறியில் வளர்த்தார். இன்ப துன்பங்களிடையேயும் அவரது பக்திக் கனல் கொழுந்துவிட்டு எரிந்தது.

எவ்வளவு இடர்கள் வந்தாலும் துன்பத்தால் தாக்கப்பட்டாலும் சோராமல் இலக்கியப் பணியில் சிறந்து விளங்கினார். அவருமாறு 1865 இல் வேதாணிக்கம் நாடார் இயற்றிய வேதப் பொருள் அம்மானை என்ற நூலைத் திருத்தியமைத்தார்.

(7 ஆம் பக்கம் பார்க்க )

# விடாமுயற்சியால் வாழ்வில் தளராது முன்னேறிவரும் விழிப்புலனிழந்தோர்

**கனகலிங்கம் தர்மசேகரம்.**
முகமாலை.

உலகம் நவநாகரிகத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டு இருக்கின்றது. இயந்திரத்தனத்துக்குள் மனிதர்கள் இயல்பாகவே இணையத் தலைப்பட்டு விட்டனர். எதிலும் ஓர் அவசரத்தன்மை தலை தூக்கியுள்ளது. மாற்றங்கள் துரிதகதியில் மலர்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் மனிதர்களின் உணர்வுகள் மட்டும் கற்காலம் தொட்டுக் கம்பியூட்டர் யுகம் வரையும் மாற்றம் அடையாமலேயே இருக்கின்றன. இது இப்படி இருக்க, ஒரு விடயம் தொடர்பான பார்வையில் காலத்துக்குக் காலம் தோன்றும் மனிதர்கள் இடையே வேறுபட்ட மனப்பாங்குகள் காணப்பட்டு வருவதை நாம் காண முடிகின்றது. எனினும் விழிப்புல வலுவிழந்தவர்கள் தொடர்பான மனப்போக்கு சமூக மட்டத்தில் பெரிய மாற்றம் கண்டு விடவில்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

முன்னைய காலங்களில் பார்வைக் குறைபாடு என்பது பெரும் குறைபாடாகவும், அவர்கள் ஒரு வேண்டத்தகாத பிறப்பினர் என்ற வகையான ஒரு மனப்போக்கும் இருந்தது. ஆனால் காலப்போக்கில் இந்த நிலைப்பாட்டில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டது என்பது கண்கூடு. இன்றும்கூடச் சில பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு இருக்கும் இத் தன்மைபட்ட குறைபாட்டை வெளியே சொல்ல அச்சப்படுகிறார்கள் அல்லது வெட்கப்படுகிறார்கள். அது மட்டுமன்றி அவர்களை வீட்டிலே முடக்கி வைத்துக் கல்வியியல் ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ முன்னேற விடாது செய்துவிடுகின்றனர். இத்தன்மைபட்ட செயற்பாடானது தொடர்ந்தும் பார்வைக் குறைபாடு உடையோர் யாரிலாவது தங்கி வாழவேண்டிய நிலைப்பாட்டை ஏற்படுத்தி விடுகின்றது.

சுகமாகத் திரியவேண்டிய பிறப்பினர் சுமைகளாக்கப் படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். பார்வைக் குறைபாடுடைய அனைவரும் சமூகத்திற்கு உரிய ஒத்துழைப்பு வழங்கக் கூடியவர்களாக உருவாக்கப்பட வேண்டும். இது சமூகத்தவர் ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையாகும்.

பார்வைக் குறைபாடுடையவர்கள் சமூகத்தில் ஊடாடுகின்றபோது சில சமயங்களில் உள ரீதியான தாக்கங்களுக்கு ஆட்படுகின்றனர். சிலருடைய அனுதாபம் கலந்த பார்வை அவர்களைத் தன்னம்பிக்கையற்றவர்களாகவும், தாழ்வு உணர்ச்சி உற்றவர்களாகவும் ஆக்கி விடுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அனுதாபத்துக்குப் பதிலாக அவர்களது வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவதன் மூலம் அவர் தம் வாழ்வு மேம்பாட்டுக்கு உதவ முடியும்.

எமது நாட்டைப் பொறுத்தளவில் விழிப்புல வலுவிழந்தோர்கள் பலர் பெற்றோர்களின் விழிப்புணர்வு கொண்ட செயற்பாடுகளாலும், சமூகநலன் விரும்பிகளின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பாலும் தமது விடா முயற்சியாலும் வாழ்க்கையில் முன்னேறி வருகின்றனர்.

இவர்கள் சுயமாகச் சம்பாதித்து தமது சொந்தக் காலில் நிற்கக் கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளனர். சில சூழல் தாக்கங்களினால் தமது கல்வியைத் தொடர முடியாத பலர் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைச் சேர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். கல்வித்துறையில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பவர்கள் பட்டதாரிகளாகவும், நல்லாசிரியர்களாகவும், சட்டத்தரணிகளாகவும் பிற அரச தொழில்களிலும் மிளிர்ந்து கொண்டு இருக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து இத்தகையோர் பல அரிய சாதனைகளைப் படைத்து வருகின்றனர். அரசியல் துறையில் ஈடுபட்டு அமைச்சர்களாகக் கூட உருவாகி ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் உன்னத பணிக்குத் தம்மை அர்ப்பணித்திருக்கிறார்கள். இதற்கு உதாரணமாகப் பிரித்தானிய அமைச்சரவையை அலங்கரித்துக் கொண்டு இருக்கும் கல்வி வேலைவாய்ப்பு அமைச்சரான கனம் டேவிட் விளங்கட் அவர்களைக் குறிப்பிடலாம்.

வருடந்தோறும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி விழிப்புலவலுவிழந்தவர்களின் அடையாளச் சின்னமாகிய வெள்ளைப் பிரம்பின் மகத்துவத்தை உணர்த்தும் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகெங்கும் வாழ்கின்ற பார்வைக் குறைபாடுடையவர்களால் இப்பிரம்பு பாவிக்கப்பட்டு வருகின்றது. இத்தினத்தில் இப்பிரம்பு பற்றிய அனைத்துத் தகவல்களையும் அறிந்து கொள்ள வேண்டியது அனைவரதும் கடமையாகும். தமிழ்ப்பேசும் பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்கின்ற விழிப்புலனற்றவர்களை

[11 ஆம் பக்கம் பார்க்க]

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## உண்மையான திருமண உறவு

ராமனும் சீதையும் காட்டில் இருக்கிறார்கள். இருவரும் தபஸ்வினி ஒருத்தியைக் காணச் செல்கின்றனர். கடுமையான விரதங்கள் மற்றும் தவத்தின் காரணமாக அந்தத் தபஸ்வினியின் உடல் வாடி வதங்கியதாக இருந்தது.

சீதை சென்று அவளைப் பணிந்தாள். அப்போது அந்தத் தபஸ்வினி சீதையின் தலையில் கைவைத்து ஆசிர்வதித்துக் கூறினாள்.

'அழகிய உடல் கிடைப்பது பெரும்பேறு. அது உனக்குக்கிடைத்திருக்கிறது. நல்ல கணவன் கிடைப்பது அதைவிடப் பேறு. அதுவும் உனக்குக் கிடைத்திருக்கிறது. அத்தகைய கணவனுக்கு முற்றிலும் பணிந்து நடப்பது மாபெரும் பேறு. நீ அவ்வாறு நடக்கிறாய், எனவே நீ இன்பம் நிறையப்பெற்றவளாகத் தான் இருக்கவேண்டும்'.

அதற்கு சீதைசொன்னாள், 'அம்மா, கடவுள் எனக்கு அழகிய உருவத்தைத் தந்திருக்கிறார். ஒரு சிறந்த கணவனை அளித்திருக்கிறார்; இவற்றிற்காக நான் தொழில் செய்யும் இந்தச் சூழ்நிலையில் என்னை வைத்திருக்கிறது. இளம் வயதில் பரம்பரைத் தொழிலாக இதனை நான் கற்றுக்கொண்டேன். எனக்குப் பற்றேதும் இல்லை. ஓர் இல்லறத்தாளாக என் கடமைகளைச் செய்ய முயற்சிக்கின்றேன். என் பெற்றோரை மகிழ்விப்பதற்கான சேவைகள் அனைத்தையும் செய்கின்றேன். உங்கள் யோகம் எனக்குத் தெரியாது. நான் துறவியாகவில்லை. வீட்டைத்துறந்து காட்டிற்குப்போகவில்லை. என்னிடம் நீங்கள் பார்ப்பவை கேட்பவை எல்லாம். எனது நிலைக்கு உரிய கடமைகளைப் பற்றின்றிச்செய்ததால்கிடைத்ததாகும்' என்றாள். ★

- சுவாமி விவேகானந்தர்

## தமிழ்ப்பணிக்கும் சிறந்த...

(6 ஆம் பக்கத் தொடர்)

100 பாடல்கள் கொண்ட "இரட்சண்ய நவநீதம்" எனும் செய்யுள் நூலை இயற்றினார். 1868 இல் "பால்ய பிரார்த்தனை" எனும் பதிகம் பாடினார். 1883 இல் இலக்கண சூடாமணியை எழுதி வெளியிட்டார். 1893 இல் "பாளையங்கோட்டை எச். ஏ. கிருஷ்ண பிள்ளை கிறிஸ்தவரான வரலாறு" என்ற தன் வரலாற்று நூலை எழுதினார்.

1894 இல் இரட்சண்ய யாத்திரீகம், பதிப்பிக்கப்பட்டது. "இரட்சண்ய மனோகரம்" எனும் நூலும் இக்காலத்தில் இயற்றப்பட்டது. "போற்றித் திரு அகவல்" எனும் அகவல் பாடல்களைப் பாடினார். இரட்சண்ய சரிதம் எனும் நூலும் முற்றுப் பெறாத நிலையிலுள்ளது.

இரட்சண்ய யாத்திரீகம் கவியரசரின் கவித்திறனுக்கும் படைப்புத்திறனுக்கும் தக்கதோர் எடுத்துக் காட்டாக அமைகிறது. இது அவரது பெருங்காப்பியம்--பக்திப் பனுவலாகும். இந்நூலில் 3766 பாடல்களும் 5 பருவங்களும் 47 படலங்களும் உள்ளன. இப் பருவ அமைப்பு மகாபாரதத்தையும் படலம் எனும் அமைப்பு கம்பராமாயணத்தையும் ஒட்டியமைந்துள்ளது.

இரட்சண்ய யாத்திரீகம் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட "மோட்சபிரயாணம்" எனும் நூலையும் தமிழ், கிறிஸ்தவ வேதாகமத்தையும் முதன் நூலாகக் கொண்டு எழுந்த முற்றுருவக் காவியம்.

ஏர் கார் மைக்கேல் எனும் அம்மையாருக்கு கவியரசர் இக்காப்பியம் பற்றி கூறியது. "இரட்சண்ய யாத்திரீகத்திலே எனது வாழ்வையே ஊற்றியுள்ளேன்" என்பதாகும்.

கவியரசர் தனது 73 ஆம் வயதிலே 1900 ஆண்டு பெப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அவர் தம் புகழுடல் பாளையங்கோட்டையிலுள்ள சமாதானபுரத்தின் கல்லறைத் தோட்டத்திலே அடக்கம் செய்யப்பட்டது.

அவர் மறைந்தாலும் அவரது தமிழ்ப்பணியும் சிறந்த வாழ்வும் மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்து விட்டன. ★

# காலங்கருதிய கல்விப் பணி புரிந்து அழியா இடம்பெற்ற கமலநாதன்

உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன் காலமாகிவிட்டார் என்ற செய்தியைப் படித்ததும் அதிர்ச்சியுற்றேன். இளைப்பாறி நானும் உங்கள் வரிசையில் சேரப் போகிறேன் என அவர் இறப்பதற்குச் சில நாள்களின் முன்னர் சொன்னவர். இளைப்பாறும் முன்னர் இறைவனடி சேர்ந்துவிட்டார். நேற்று இருந்தார் இன்று இல்லை என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமானார் நண்பர் கமலநாதன்.

எழிலகம், தொழிலகமான மலையகத்தில் தன் தந்தையாருடன் வாழ்ந்து அங்குள்ள பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் படித்து, திரும்பவும் தான் பிறந்த ஊருக்கு வந்து, புகழ்பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று கற்றார். படித்த காலத்தில் கல்லூரிகளிற் பல பரிசுகள்

**நீத்தார் நயப்புரை**

பெற்றதுடன் விளையாட்டுக்களிலும் முன்னணி வகித்தார். இளங்கலைமாணிப்பட்டம் பெற்ற பின் அவர் தான் கற்ற பேராதனைப்பல்கலைக் கழகத்திலேயே பகுதி நேர ஆங்கில விரிவுரையாளராக இருந்தார். அதன் பின்னர் அம்பாறை வளாகம், யாழ். பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் பகுதி நேர ஆங்கில போதனாசிரியரானார்.

மலையகத்தில் கட்டுகஸ்தோட்டை, சென் அன்ரனிஸ் கல்லூரியில் ஆசிரியராக விளங்கி சொந்த ஊருக்கு வந்து தொண்டாற்று, உயரப்புலம், மானிப்பாய் முதலிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

உதவி ஆசிரியராக விளங்கிய அமரர் கமலநாதன் இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் உப அதிபராகவும் பின்னர் அதிபராகவும் உயர்ந்தார். மல்லாகம் மகா வித்தியாலயக்கொத்தணி அதிபராக இருந்த போது அப்பகுதியிலுள்ள பல பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அயராதுழைத்தார்.



தான் படித்த கல்லூரியான ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதியராகி 1995 இல் மேற்படி கல்லூரியின் நூற்றாண்டு விழாவை அதி சிறப்பாக நடத்தினார். அதனால் கல்விச் சமூகத்தின் பாராட்டைப் பெற்றார்.

அமரரின் செயல் திறமையால் தெல்லிப்பழை கல்விக் கோட்டக் கல்வி அதிகாரியானார். படிப்படியாக முன்னேற்றம் கண்ட அமரர் கமலநாதன் வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளராக விளங்கினார். அவரிடம் சில அரிய பண்புகள் காணப்பட்டன. அவர் எதற்கும் அஞ்சாதவர். நேர்மையால் கனிந்தவர் — "பணியுமாம் என்றும் பெருமைக்கு" அவர் அவரேதான். அவர் உயர் அதிகாரிகளுடனும், தனது நண்பர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகியவர்.

மனிதாபிமானம் நிறைந்த ஒரு நல்லாசிரியராகத் தம்மைப் புடமிட்டமையால் அவர் அதிபர் ஸ்தானத்திற்கும் கோட்டக் கல்வி அதிகாரியென்ற பெருமைக்கும் அவரை உயர்த்தியது. இளந் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும், பிரதேச மக்களின் மனதில் நிறைந்தவராகவும் சமூகத் தொண்டராகவும் தன்னடக்கத்துடன் பணி புரிந்தார் பெரியார் அமரர் கமலநாதன்.

இழப்புக்களைக் கண்டு அமரர் துவண்டு விடவில்லை. அவர் தனது நான்கு சகோதரர்களை அடுத்தடுத்துச் சில வருட இடைவெளியில் இழந்தபோதும், தனது அன்பகலா மனைவியை 1996 இல்

**- ந. சிவபாதம் -**

இழந்த போதும் அவர் நிமிர்ந்து நின்றார். மாணவர்களுடனும் நண்பர்களுடனும் தோழமை பூண்டு துக்கத்தைத் துச்சமாக மதித்துக் கல்விச் சேவைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

அமரர் கமலநாதனின் காலங்கருதிய கல்விப் பணிகள், சமுதாயப் பணிகள் வலிகாமம் கல்வி வரலாற்றில் பொன்னைக்குமிடத்தில் பூவாக நிறைந்துள்ளமை அவரது நண்பர்களின் மனங்களில் ஓர் அமைதியை ஏற்படுத்தும். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

# கல்வி, இலக்கியம்....

(6 ஆம் பக்கத் தொடர்)
அது இலேசான காரியமல்ல. மெத்தப் படித்தவர்களாலும் இலக்கியம் படைக்க முடிய வில்லை! சிறந்த நாடகாசிரியர்களான மஹாகவி ஷேக்ஸ்பியர், மொலியர்ஹென்றிக்இப்சென், ஜோர்ஜ்பெர்னாட் ஷா போன்றவர்களெல்லாம் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்களல்லர். ஆனால் சிறந்த அறிவாளிகள். இலக்கியம் படைப்பவர்கள். கருவிலே திருஅமையப் பெற்றவர்கள். உங்களிடம் இயல்பாகவே அமைந்துவிட்ட திறமையை நீங்கள் கல்வி, கேள்வி, அனுபவம், பயிற்சி ஆகியவற்றால் வளர்த்துக் கொள்ளலாம். நாடகம் படிக்கின்ற பிள்ளைகள் கட்டாயமாக நாடகம் எழுதப் பழக வேண்டும். இல்லையென்றால் உங்களுடைய கல்வி ஏட்டுச் சுரக்காய்தான். புராண இதிகாச வரலாற்று நாடகங்கள் எழுதுவதைவிட, நாம் வாழுகின்ற சமூகத்தைச் சித்திரிக்கின்ற நாடகங்கள் எழுதுவதே நல்லது.

உங்களுக்கு நாடகம் கற்பிக்கும் ஆசிரியருக்கு நாடகம் எழுதத் தெரியாமல் இருக்கலாம்.. அல்லது ஒரு சில வகை நாடகங்களே எழுதத் தெரிந்திருக்கலாம். ஆனால் நீங்கள் எல்லாவகை நாடகங்களையும் எழுதிப் பழக வேண்டும். வெவ்வேறு வகை நாடகங்கள் எழுதுகின்ற ஆசிரியர்களைச்சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடியும் அந்தந்த வகை நாடகங்கள் எழுதுகின்ற நுட்பங்களை அறிந்துகொள்ளலாம். நாடக நூல்களையும்வாசிக்க வேண்டும்.

## நாடகத்தை ரசித்தல்

அடுத்த நோக்கம் நாடகத்தை ரசிக்கப் பழகுதல். ரசிப்பதற்கும் ஒரு தகுதி வேண்டும். ஒரு நல்ல கவிதையை இன்னொரு கவி உள்ளம் கொண்டவனால்தான் நன்றாக நயக்க முடியும். அது போன்றதுதான் நாடக நயப்பும். நாம்மேடை நாடகத்தைப்பார்த்து ரசிக்கலாம். வானொலி நாடகத்தைக் கேட்டுச் சுவைக்கலாம். ஒரு நாடக நூலை வாசித்து நயக்கலாம். எல்லோரும்தான் நாடகத்தை ரசிக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் ஓர் அழகான பூவை ரசிப்பது போல முழுமையாகப் பார்த்து விட்டு 'நன்றாக இருக்கிறது' என்று பொதுப் படையாகச் சொல்லி விட்டுப் போய் விடுவார்கள். நாடகம் கற்கும் மாணவர்கள் அப்படியல்லர்.

ஒரு நாடகாசிரியன் நாடகத்தின் முக்கிய அம்சங்களான கதை, கதைப்பின்னல், பாத்திரவார்ப்பு, கருத்து, சூழ்நிலை ஆகியவற்றை எப்படிக் கையாண்டுதான் சொல்ல வந்ததைத் திறம்படச் சொல்கிறான். நாடகத் தயாரிப்பாளன் அவற்றுடன் நடிப்பு, வேடப் பொருத்தம், அலங்காரங்கள், இசை, பின்னணி இசை ஆகியவற்றையும் சேர்த்து எமக்கு எப்படி நாடக விருந்தளிக்கிறான் — என்று இந்த ஒவ்வொரு அம்சங்களையும் தனித்தனியாக எண்ணிப் பார்த்து, நிறுத்து, ஒன்றுடன் ஒன்றை உரசிப் பார்த்தே நாடக மாணவர்கள் நாடகத்தை ரசிக்கிறார்கள். அவர்களுடைய நயப்பு பரந்ததும் ஆழமானதுமாகும்!

## நாடகத்தை விமர்சித்தல்

ஒரு நாடகத்தை ரசிப்பதற்கும் விமர்சிப்பதற்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. நாங்கள் நாடகத்தை முழுமையாக ரசிக்கிறோம். விமர்சனம் செய்யும் பொழுது முன்பு சொல்லப்பட்ட, நாடகத்தின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் கருத்தூன்றிக் கவனித்து ஆராய்கிறோம். ஒருநூலை விமர்சிப்பதானால், அதை மிகவும் கவனமாக 'ஏன்?' 'ஏன்!' என்று கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, வாசிக்க வேண்டும். இந்தநூலில் ஆசிரியர் சொல்ல வந்தது என்ன? அதை அவர் எப்படிச் சொல்கிறார்? அதில் அவர் வெற்றி பெற்று விட்டாரா? அவரது சாதனை என்ன? அந்நூலினால் நாம் பெறும் பயன் என்ன? சமுதாயம் பெறும் பயன் என்ன?— என்று ஆராய்ந்து ஒவ்வொரு அம்சமாக எடுத்து உரைத்து உரைத்துப் பார்த்து, நிறுத்துப் பார்த்து, தரமானது எது? தரம் குறைந்தது எது? என நாமே தீர்ப்பும் வழங்க வேண்டும். நாடகத்தை விமர்சிக்கும் முறையும்இதுவேதான். நடிக்கப்பட்ட நாடகமானால் நாடக ஆற்றுகைக்குரிய லட்சணங்களை எடுத்து ஆராய வேண்டும். ஒரு நாடகத்தை விமர்சிப்பதன் மூலம் நாம் அதைக் கூடுதலாக விளங்கிக் கொள்கிறோம்; எங்களையே நாங்கள் கூடுதலாக விளங்கிக் கொள்கிறோம். நாடகம் பற்றிய எங்களது அறிவும் விரிவடைகின்றது.

நாடக விமர்சனம் செய்வதற்கு பரந்துபட்ட இலக்கிய அறிவும் நாடக அறிவும்அவசியம். சிறந்த நாடகாசிரியரான அறிஞர் பெர்னாட்ஷா நீண்ட காலமாக பத்திரிகைகளுக்கு நாடக விமர்சனம் எழுதிக்கொண்டிருந்தவர். மற்றவர்களது நாடகங்களை வாசித்து, மேடை நாடகங்களுக்கு விமர்சனங்கள் எழுதிப் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் கொண்டுதான் அவர் பிற்காலத்தில் பல தலை சிறந்த நாடகங்களை எழுதினார்.

## நாடகம் தயாரித்தல்

நாடகம் கற்கும் பிள்ளைகள் நாடகத்தைத் தயாரிக்கவும் கட்டாயமாகப் படிக்க வேண்டும். ஒரு நாடகத் தயாரிப்பாளன் இன்னொருவருடைய நாடகத்தைத் தயாரிக்கும் பொழுது அதை அப்படியே தயாரிப்பதில்லை. தனக்கு வேண்டிய மாற்றங்களைச் செய்தே அதைமேடையேற்றுகிறான். நாடகாசிரியன், கதை, கதைப் பின்னல், பாத்திர வார்ப்பு, கதை சொல்லும் முறை ஆகியவற்றின் மூலம் தான் சொல்ல வந்ததைச் சொல்வதுபோல, நாடகத் தயாரிப்பாளனும், நடிகர்த்தெரிவு, நடிப்பு, மேடை அமைப்பு, காட்சி அமைப்பு வேஷப்பொருத்தம், பின்னணி இசை, ஒலி- ஒளி அமைப்பு ஆகியவற்றின் மூலம் தான் சொல்லவிரும்பியதைச் சொல்கிறான். இவற்றையெல்லாம் எந்தெந்த அளவுக்கு, எந்தெந்த இடங்களில், எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்துவது என்பதை அவனே தீர்மானிக்கிறான்.

உங்களுக்கு வாழ்க்கையில் பெரிய நாடகங்களைத் தயாரிக்கும்வாய்ப்புக்கிடைக்காமல் போகலாம். உங்களில் பெரும்பாலானோர் பள்ளி ஆசிரியர்களாகத்தானே வரப் போகிறீர்கள்? கடைசி, பாடசாலை நாடகங்களைத் தயாரிக்கும் வாய்ப்பாவது உங்களுக்குக் கிடைக்கும். இல்லாவிட்டால் அந்த வாய்ப்பை நீங்களாகவே ஏற்படுத்திக் கொண்டு நீங்கள் கற்ற கல்வி மற்றவர்களுக்கும் பயன்படச் செய்யுங்கள். ★

---

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளராக இருந்து தற்போது மேலதிகப் பொது முகாமையாளராகத் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும்

**திரு. வே. இராஜேந்திரன்**

அவர்களின் அன்புத் துணைவியார்

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

கொங்கிறீட் பகுதி,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
உரும்பிராய்.

(73205)

---

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 — 05 — 1965

மறைவு 04 — 02 — 1986

**அமரர் பொன்னம்பலம் உமாபரன்**

திதி: தசமி - 30-01-2000

நிலையில்லா உலக வாழ்வைத் துறந்து நிலையான பேரின்பப் பெருவாழ்வை அடைந்த எம் அன்புச் செல்வா! பாசமுள்ள உள்ளங்களால் உம்மை எப்படி ஐயா மறக்க முடியும்? உமது ஆத்மா சாந்தி பெற வண்ணை வைதீஸ்வரப் பெருமானை வணங்குகிறோம்.

உமது பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

215, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(73200)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

**சிவலோகநாயகி குணபாலசிங்கம்**

(உசன், மிருசுவில்)

எமது சக ஆசிரியை திருமதி ம. தவபாலன் அவர்களுடைய அன்புத் தாயாரின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

(73170)

---

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு 23 — 02 — 1955

இறப்பு 11 — 02 — 1999

**அமரர் இரத்தினம் தனபாலசிங்கம்**

திதி: 30-01-2000

நோய் மூலம் வந்த அவலத்தால்
உனது உயிர் பிரிந்ததையா!
என்றென்றும் — நான்
உன் மீது கொண்ட — பாசம்
ஒரு போதும் வற்றாதய்யா...!
ஓராண்டு சென்றாலும் — உன்
நினைவுகள் என்னைவிட்டுப் பிரியவில்லை
என்றும் உனது ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி என்றும்
உன் பிரிவால் வாடும்

உனது அன்பு
**மனைவி.**

பிரம்படி லேன், கொக்குவில்.

(73195)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01-04-1981

மறைவு 30-01-1999

செல்வன்

**செல்லத்துரை தயாளரூபன்**

**(தயான்)**

(உடுப்பிட்டி அ. மி. கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

கணப்பொழுதில் கடவுளுடன் கலந்திட்ட
எம் கண்மணி! நின்முகம் காணாது எம் துயர் ஆறாது
மாறாது உன் நினைவு நாம் மடியும் வரை!
நீறாகி நம் உடல் தீந்து போனாலும் — அந்நீற்றினிலும்
கலந்திருக்கும் உன் நினைவு — தினம்
தேடுகின்றோம் திக்கெல்லாம் உன் திரு உருவை
காணவில்லை கனிமுகத்தைக் கனவில் கூட
மலர்ந்த மௌனப் புன்னகையுடன் மீண்டும்
வாராயோ என வணங்கி நிற்கும்

**குடும்பத்தினர்.**

தேவாலய வீதி,
உடுப்பிட்டி.

(73187)

## ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம்

வருடாந்த மகோற்சவம்
5-2-2000 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 ஆம் திகதி தேரும் 19 ஆம் திகதி தீர்த்தமும் நடைபெறும்.

ஆலய வீதியில் உள்ள கடைகள் 3 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

நிர்வாகசபைத் தலைவர்.

[73161]

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி இ. சிவகுமாரனின்
தாயாராகிய

### திருமதி தங்கரட்ணம் நாகரட்ணம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு, அன்னாரது ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
யா/ உடுவில்
முருகமூர்த்தி வித்தியாசாலை.

(சி/10817)

## இலங்கை இசை வேளாளர் சங்கம்
## மாதாந்த இசை நிகழ்வு

அன்புடையீர்!

பாரம்பரியமான நாதசுர - தவில் கலைகளை வளர்க்கவும், கர்நாடக சங்கீத மரபுகளைப் பேணவும், இளங்கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கவும், கலாரசிகர்களுக்கு நல் விருந்தளித்து கலாரசனையை வளர்க்கவும் மாதம் ஓர் இசை நிகழ்வு! கலையார்வம் மிக்கோர் வளரத்துடிக்கும் இளங்கலைஞர்கள், கலாரசிகப் பெருமக்கள் யாவருக்கும் மாதந்தோறும் ஓர் அரிய சந்தர்ப்பம்!

காலம்:- 30 - 01 - 2000 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 3-30 — 5-30 மணி (இன்று)

இடம்: தாவடி பிள்ளையார் முன் கலையரங்கம்

தலைவர்:- திரு. செ. கதிர்காமத்தம்பி J. P

பிரதம விருந்தினர்:-
திரு. இ. பரமேஸ்வரலிங்கம்
(கன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்.)

இசை நிகழ்வுகள்

நாதஸ்வரம்: திரு. V. K. பஞ்சமூர்த்தி - குமரேஸ்
தவில்: திரு. K. நித்தியானந்தம்
திரு. K. சிவகுமார்
திரு. T. உதயசங்கர் - திரு. S. சுதாகரன்

நன்றியுரை: திரு R. சுந்தரமூர்த்தி சங்கத் தலைவர்

கலைஞர்கள், கலாரசிகர்கள், இசை ஆர்வலர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. பிறேமானந்த்
செயலாளர்

இலங்கை இசை வேளாளர் சங்கம்
இணுவில் மேற்கு,
இணுவில்.

(73150)

## பரிசளிப்பு விழா

சங்கானை, ஜன. 30

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலைய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அதிபர் ச. கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

(ஐ-29)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 1998, 99 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரிசளிப்பு விழாவில் புலமைப் பரிசில் சான்றிதழ்களை பெறாத மாணவர்களுக்கு யாழ். செயலகத்தில் வைத்து இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சான்றிதழ்கள் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை அங்கு வைத்து வழங்கப்படும் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (3-5)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

### கலைப்பீடப் பரீட்சை 1998
### முதலாம் அரையாண்டு கலைப்பீடப் பரீட்சை 1998

மேற்குறித்த 1998 ஆம் ஆண்டுப் பரீட்சைக்குத் தகுதியுடைய மாணவர்கள், கலைப்பீட அலுவலகத்திலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களை 2000-02-01 ஆம் திகதியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களை 2000-02-15 ஆம் திகதிக்கு முன்னர் கலைப்பீட அலுவலக உதவிப் பதிவாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2000-02-15 ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

- பதிவாளர்

(சி/10848)

## உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் புதிய கற்கை நெறி அறிமுகம்

புத்தாயிரமாம் ஆண்டில் யாழ்ப்பாணம் உயர் தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தினால் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (எச். என். டி. எம்.) என்ற புதிய கற்கை நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருந்த உயர் தேசிய வணிக டிப்ளோமா (எச். என். டி. சி.) பயிற்சி நெறிக்குப் பதிலாகவே இந்த புதிய பயிற்சி நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நான்கு வருடங்களை உள்ளடக்கிய இந்தப் பயிற்சிநெறியில் முதல் இரண்டு வருடப் பாடங்களில் 50 சத வீதம் ஆங்கிலத்திலும் 50 சத வீதம் தமிழிலும் கற்பிக்கப்படும். மூன்றாம், நான்காம் வருட பாடங்கள் அனைத்தும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படவுள்ளன.

உயர்தேசிய முகாமைத்துவ பாடநெறியில் முகாமைத்துவ தந்திரோபாயம், மனித வள முகாமைத்துவம் நுகர்வோர் நடத்தை, கைத்தொழிலும் நிறுவன உளவியலும், ஆய்வு நுட்ப ஆராய்ச்சி போன்ற புதிய கற்கைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

தேசிய மட்டத்தில் தகவல் தொழில் நுட்பத்துக்கான ஓர் அங்கீகரிக்கப்பட்ட தகுதிப்பத்திரத்தை வழங்கும் கற்கை நெறியாகவும் இது விளங்குகின்றது.

இந்தக் கற்கை நெறியில் சேர விரும்புவோர் எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளுமாறு நிறுவன இயக்குநர் சீ. ராஜரட்ணம் கேட்டுள்ளார்.

(இ-6)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் இளையதம்பி தர்மராசா

மலர்வு 24 - 04 - 1933
உதிர்வு 30 - 01 - 1999

திங்கள் தோறும் நின்
நிதி பார்த்து நோன்பிருந்தோம்.
பன்னிரண்டு திங்கள் - சில
பகல் போல் பறந்ததையா!
எத்தனை நாள் சென்றாலும்
உந்தன் நினைவலைகள்
எம்மை விட்டகலாது.
ஏனென்றால்,
இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்ததுவும்;
எங்கள் உயர்வுக்காய்
நின்னை உருக்கியதும்;
நெஞ்சம் மறக்கின்ற சங்கதியா?
நின் ஆன்ம சாந்திக்காய்
நிமலனைத் தினந்தோறும் வந்திப்போம்!

குடும்பத்தினர்

மணற்பகுதி,
புத்தூர்.

(73168)


## அப்பலோ வைத்திய நிலையம்
## APOLO NURSING HOME

இன்று தனது முதலாவது அகவையைப் பூர்த்தி செய்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
வழமைபோல் கண் வைத்திய ஆலோசனையும் கண் சத்திர சிகிச்சையும் நடைபெறுகின்றன.

## அப்பலோ வைத்திய நிலையம்

16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்தி அருகில்) T. P. No: 021 - 3305

குறிப்பு: ஒரு வருடம் நிறைவு பெறுவதை முன்னிட்டும் நோயாளரின் நன்மை கருதியும் கண் சத்திர சிகிச்சைக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

(73122)

- நிர்வாகம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நாதன் பங்களா சரஸ்வதி வித்தியாலய வீதி, சுரவெட்டியைச் சேர்ந்த யூஜீன் யூகராஜா பிரான்சிஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 421322112 V) யும், விசேட அடையாள அட்டை (இல. 0909035207) யும் நெல்லியடிக்கும் அரசடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். (73165)

சுந்தரலிங்கம் பிரதாபன் என்பவரது தே. அ. அட்டை (இல. 763231666V) வி. அ. அட்டை, பாஸ் என்பன வெலிங்டன் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்குமிடையில் (28-01-2000) அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து "தீஸ் எலக்ரோனிக்ஸ்" நல்லூர் கோயில் முன்பாக ஒப்படைக்கவும். (73167)

இல. 21, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சு. புவனேஸ்வரி என்பவரின் தே. அ. அட்டையும் (இல. 358011179 V), விசேட அ. அட்டையும் கொடிகாமத்தில் இருந்து வரும் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (73147)

மருதங்குளம் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை கனகமணி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (517602374 V-091006190) யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்திற்கு அனுப்பி உதவவும். சன்மானம் வழங்கப்படும். (73124)

26-01-2000 புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் கொடிகாமம் வீதியில் அரசடிக்கும் கோயிற் சந்தைக்கும் இடையில் எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அரசடியிலுள்ள ரவன்ற் ரியூட்டரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (73128)

வீரபத்திரர் கோயில் வீதி, கோண்டாவில் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சதானந்தன் யோகராணி என்பவரது தேசிய அ. அட்டை (565043706V), விசேட அ. அட்டை (0902011732) இரண்டும் 19-01-2000 அன்று கோண்டாவிலுக்கும் கந்தர்மடத்துக்கும் இடையில் பலாலி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (73186)

## கலந்துரையாடல்

மானிப்பாய், ஜன. 30

மானிப்பாயில் கிராமிய வைத்தியசாலை நிறுவுவது தொடர்பாக கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடல் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு மானிப்பாய் யாழ். வீதியில் உள்ள சபை அலுவலகத்தில் இரா. வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உத்தேச கிராமிய வைத்தியசாலைக்கு 25 பரப்பு நிலத்தைப் பெறுவதற்கு மானிப்பாய் சுகாதார, சமூக, சுற்றாடல் அபிவிருத்திச்சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக இப்பகுதி சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மற்றும்கிராம அமைப்புகளின் கருத்துக்கள் இக்கலந்துரையாடலில் பெறப்பட உள்ளன. (ஜ-90)

## விற்பனைக்கு

பாவித்த கமரா லென்ஸ்கள் Minolta -1-4 -50mm Canon 1·8 — 50 mm, Nikon - 2-8 — 28 mm Minolta 4-200mm என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- எஸ். திருச்செல்வம், 210, பிரதான வீதி, பருத்தித்துறை. (73169)

நல்ல நிலையிலுள்ள சிங்கர் குளிர்சாதனப் பெட்டி, சிங்கர் தையல் இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 3, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, (லைடன் சந்தி அருகில்). (73151)

வீட்டுத்தளபாடங்கள், பாவனைப் பொருள்கள்; மோட்டார் சைக்கிள் சைக்கிள் போன்ற பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு. மாலை வேளைகளில் பார்வையிடலாம். 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (73189)

கமவண்டில் 9¾ சுற்று ரூபா 35,000, தையல் இயந்திரம் ரூபா 2,500 விற்பனைக்கு உண்டு! மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை தொடர்பு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (73176)

## இறைச்சிக் கோழி

Broiler, Cullbirds இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (73072)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்.) (73085)

இறைச்சிக்கோழி புரோயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [72981]

## வீடுகள் விற்பனைக்கு

இல. 620, மானிப்பாய் வீதியில் 4½ பரப்பு விஸ்தீரணமுள்ள காணியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திரு த. கணேசமூர்த்தி இல. 60, சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (72960)

## திருமணசேவை

இந்து கிறிஸ்தவ மணமக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ளனர். துரிதமான, திருப்திகரமானசேவை. நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; கு. திருவிளங்கம் இல. 90, சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (73156)

## விற்றுத் தீர்த்தல்

நல்லின ஜமுனாபாரி கடாக்கள் —2, வான் கோழி, வெள்ளைக் கினிக் கோழிகள், அவற்றின் முட்டைகள், ஆட்டெரு. இரண்டு கோழிக்கூடுகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.P. தாசன், 75, செட்டித்தெரு, நல்லூர். (73145)

## மணமக்கள் தேவையா?

சகல சமயத்திலும், சகல தரத்திலும் மணமக்கள் தேவையா? நம்பிக்கையுடன் நீங்கள் நாட வேண்டிய இடம். மோகனாராணி திருமண ஏஜன்ட், இல. 1051, நாச்சிமார்கோயிலடி, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (73138)

## 2000 வருஷ பலன்கள்

எங்கும் விற்பனையாகின்றது. எல்லா இராசிகளுக்கும் ஒரே புத்தகத்தில் பலன்கள். முந்துங்கள். பிந்தினால் தேடி அலைவீர்கள். சோதிடர் V. A. சிவராசா 152B, அரசடி வீதி, கந்தர்மடம். யாழ்ப்பாணம். (73141)


## A/L, O/L

2002 திரிகோண கணிதம், சேதனவுறுப்பு இரசாயனம், O/L கணிதம், ஆங்கிலம் (Spoken English) ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். B. Sc. (cey) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (73164)

## SALES

New Typewriters Alder (Japan) Phoenix Sigma III (Japan) Olympia (Japan) Impulse sealer (8 அங்., 4 அங்.) விற்பனைக்குண்டு. இல. 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (75160)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13 — 12 — 1952

மலர்வு 31 — 12 — 1999

## துரைராசா சரோஜினிதேவி

உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (30-01-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (சி/10850)

வருடாந்த

# பொதுக் கூட்டம்

## கிளி/பளை மத்திய கல்லூரி

பழைய மாணவர் சங்கத்தின்

வருடாந்தப் பொதுக் கூட்டம்

எதிர்வரும் 03—02—2000 (வியாழன்) அன்று பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைத்து உறுப்பினர்களையும், பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்.

(73193)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையில்
மேலதிக பொது முகாமையாளராகக் கடமையாற்றும்

திரு. வே. இராஜேந்திரன் அவர்களின்

துணைவியார்

## சகுந்தலா

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். துயரத்தில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ. நாகராசா
மின் அத்தியட்சகரும் ஊழியர்களும்,
சுன்னாகம், காங்கேசன்துறை பணிமனை.

(73181)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் மேலதிக
பொது முகாமையாளர்

திரு. வே. இராஜேந்திரன்

அவர்களின் அன்புத் துணைவியார்

## திருமதி சகுந்தலா இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவினையிட்டு அன்னாருக்கு எமது மனப்பூர்வமான கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மின் பொறியியலாளரும் ஊழியர்களும்

யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம். (சி/10852)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 28 — 05 — 1937

உதிர்வு 31 — 12 — 1999

திருமதி

## குணபாலசிங்கம் சிவலோகநாயகி

எங்கள் குடும்பத்தின் குல தெய்வமாய், இல்லத்தின் ஒளிச்சுடராய் இருந்து 31 - 12 - 1999 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி குணபாலசிங்கம் சிவலோகநாயகி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [30-01-2000] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அக்கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ச. குணபாலசிங்கம் (கணவன்).
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உசன்,
மிருசுவில். [73182]

# இதய அஞ்சலி

இலங்கை மின்சாரசபையின் முன்னாள்
வடபிராந்திய பொதுமுகாமையாளரும், தற்போது
கொழும்பில் மேலதிக பொது முகாமையாளராகக்
கடமையாற்றுபவருமாகிய

திரு. வே. இராஜேந்திரன்
அவர்களின் பாசமிகு பாரியார்

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியுடன் ஆழ்ந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் எமது தீராக் கவலையைப் பகிர்ந்து கொள்வதுடன் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- மின் பாவனையாளர் சேவை நிலையத்தினர்
யாழ்ப்பாணம்.

(சி/10854)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 01 — 1946

மறைவு: 30 — 12 — 1999

அமரர் **தேசிங்கம் தங்கமணி**
(பாண்டியன்)
(தபாலகம், ஊர்காவற்றுறை)

அன்பின் பிறப்பிடமாக
பாசத்தின் உறைவிடமாக
பண்பின் சிகரமாகவும்
விளங்கிய எமது குடும்பத்தின்
குலவிளக்கின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

இல. 100, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

[73196]

## பூக்கும் நிலையில் அன்னாசிப்பயிர்கள்

பனை விவசாயத் திணைக்களத்தினால் கடந்த வருடமுற்பகுதியில் பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட அன்னாசித் துண்டங்கள் பல இடங்களில் வளர்ச்சியடைந்து பூ வெளிவந்த நிலையில் உள்ளன.

இவற்றை மே மாதமளவில் பழமாக அறுவடை செய்யலாமென விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் ஜூன் மாதம் பனை தர்மக்கேணியில் அன்னாசிப் பழ அறுவடை விழா நடத்தப்பட்டது. விவசாயத் திணைக்களத்தினால் கடந்த வருடம் 10 ஆயிரம் அன்னாசித் துண்டங்கள் வழங்கப்பட்டன.

(ஜ-117)

## விடா முயற்சியால்...

(ஏழாம் பக்கத் தொடர்)

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. இருந்தும் அவர்கள் தமது தன்னம்பிக்கையாலும் தளர்வுறா முயற்சியாலும் ஏற்றம் கண்டு வருகின்றனர். இத்தினத்தில் அரச துறைகளிலும், அரச சார்பற்ற துறைகளிலும் இருக்கின்ற நலன் விரும்பிகளும், சமூக ஆர்வலர்களும் விழிப்புலனிழந்தோர்க்கு உரிய முறையில் உதவுவோம் எனத் திடசங்கற்பம் பூண்டு செயற்படுவார்களாயின் புலர்ந்துள்ள புத்தாயிரத்தில் அவர்களது வாழ்வு மேலும் ஒளிபெறும் என்பது திண்ணம்.

★


**ஞானோதயா**
அக்கடமி,
சாவகச்சேரி.
SPOKEN ENGLISH
வகுப்புக்கள் யாவும்
பழைய நேர
அட்டவணையின்படி
**1 - 02 - 2000**
அன்றிலிருந்து
நடைபெறும்.

(73209)


## ரியூசன் வகுப்பு மாணவர்களுக்கான ஞாயிறு திருப்பலி

அன்பார்ந்த மாணவர்களே!

ரியூசன் காரணமாக உங்களில் பலர் ஞாயிறு கடன்திருநாள் திருப்பலியில் கலந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறீர்கள். இதனைக் கருத்தில் கொண்டு உங்கள் வசதிகருதி பெப்ரவரி மாதம் தொடக்கம் ஒவ்வொரு ஞாயிறும் பகல் 12.45 மணிக்கு (பு. நே) 4 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பரி. அடைக்கல அன்னை ஆலயத்தில் (O. L. R) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அருள்தந்தை ஏ. சி. கிறிஸ்தோப்பர்
யாழ். மறைக்கோட்ட முதல்வர்.

(73202)

## திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
## மாதாந்தக் கருத்தரங்கு

விடயம்: "நலிவுறும் எமது சமூக அமைப்பில் இளையோரின் தலைமை"

வழங்குபவர்: திரு. க. சிவராஜா
விரிவுரையாளர், வணிகத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்.

காலம்: ஜனவரி **31** திங்கட்கிழமை

நேரம்: பி. ப. 4. 30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2393

[சி/10856]

## கண்ணீர்ப் பூக்கள்

இலங்கை மின்சார சபையின் முன்னாள் வடமாகாண பொது முகாமையாளரும், தற்போதைய இலங்கை மின்சாரசபை மேலதிக பொதுமுகாமையாளருமாகிய

திரு. வே. இராஜேந்திரன் அவர்களின்
பாசமிகு துணைவியார்

**திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்க
நிர்வாகசபையும், அங்கத்தவர்களும்
யாழ். மாநகரசபை.

(சி/10857)

# நெஞ்சம் நெகிழ்ந்த
# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட மக்கள் மின் ஒளி பெற வேண்டும் என்று அல்லும் பகலும் அயராது உழைத்தவரும்
முன்னாள் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளரும் தற்பொழுது மேலதிக பொது முகாமையாளராகக்
கொழும்பு இலங்கை மின்சார சபைத் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றுபவருமாகிய

## திரு. வேலுப்பிள்ளை இராஜேந்திரன்
**அவர்களின் அன்புத் துணைவியார்**

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் தந்துள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அமரருக்கு எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

**மின் அத்தியட்சகர், ஊழியர்கள்.**

இலங்கை மின்சார சபை,
பருத்தித்துறை மின் பாவனையாளர் சேவை நிலையம்,
பருத்தித்துறை.

(73207)

# கண்ணீர்ப்பூக்கள் காணிக்கை!

எமது பிரதேசத்தைச் சேர்ந்தவரும் முன்னாள் பிரதிப் பொது முகாமையாளரும் (இலங்கை மின்சார சபை) தற்போது உயர்வு பெற்ற மேலதிக பொதுமுகாமையாளருமாகிய

திரு. வே. இராசேந்திரம்
அவர்களின் அன்புமிகு துணைவியார்

## இ. சகுந்தலாதேவி

அவர்கள் இறையடி எய்திய செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் பிரிவால் வாடும் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஒளியருவி படப்பிடிப்பாளர்கள்,
(73212) சாமியன் அரசடி, கரவெட்டி.

# இதய பூர்வ அஞ்சலி

எமது தலைமை அலுவலக
மேலதிகப் பொது முகாமையாளர்
திரு. வே. இராஜேந்திரன்
அவர்களின் அன்புப் பாரியார்

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த, இதயபூர்வமான அனுதாபங்களை அவர்ன் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

மின்பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
மத்திய மின்சார நிலையம்,
சுன்னாகம். (73222)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின்
வடமாகாண முன்னாள்
பிரதிப் பொதுமுகாமையாளரும்
தற்போது மேலதிக பொது முகாமையாளராக கொழும்பு தலைமை அலுவலகத்தில் கடமை புரியும்
திரு. வே. இராஜேந்திரன்
அவர்களின் அன்பு மிகு துணைவியார்

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி
மின்பாவனையாளர் சேவை நிலையத்தினர்.
(சி/10855)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சாரசபையின் முன்னாள் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளரும் தற்போது கொழும்பில் மேலதிக பொது முகாமையாளராகக் கடமையாற்றும்

உயர்திரு. வே. இராஜேந்திரன்
அவர்களின் அன்பு மிகு துணைவியார்

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியுடன் ஆழ்ந்த துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் எமது தீராக் கவலையைப் பகிர்ந்து கொள்வதுடன் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மின் பாவனையாளர் சேவை நிலையம்,
வட்டுக்கோட்டை. (73206)

# சிந்து நடை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 30

சைவப்புலர் சு. செல்லத்துரை எழுதிய 'வள்ளல் ஏழுர்' என்னும் சிந்துநடைக் கூத்து நூல் வெளியீடு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நூலுக்கான வெளியீட்டுரையை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நிகழ்த்துவார். ஆய்வுரையை யாழ்ப்பாணக் கல்லூரியின் விரிவுரையாளர் பொ. அருந்தவநாதன், அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் ச. கிருபானந்தன் ஆகியோர் வழங்குவர்.

நூல் வெளியீட்டுக்கு முன்பதாக மகாவித்தியாலய தினம் கொண்டாடப்படவுள்ளது. இதில் ஆசிரியர்களுக்கு வரவேற்புபசாரமும், சேவை நலன் பாராட்டலும் இடம் பெறும். (ஐ-10-28)

# வாழைப்பழம் விலை மிகவீழ்ச்சி

வலிகாமம் பகுதியிலிருந்து தினமும் பெருமளவு வாழைக் குலைகள் சாவகச்சேரி சந்தைக்கு வாகனங்களில் கொண்டுவரப்படுவதை யடுத்து வாழைப்பழம் விலை மிகவும் வீழ்ச்சி கண்டுள்ளது. ஒரு கிலோ இரண்டு ரூபாவாக விற்கப்படுகிறது.

அண்மையில் இரவில் நிலவிய கடும் பனி பகலில் காணப்பட்ட கடும் வெயில் ஆகியவற்றின் காரணமாக வாழைமரங்களில் குலைகள் பழுத்துள்ளன. இதனால் அதிக அளவு வாழைக்குலைகள் சந்தைக்கு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ-117)

# சுவரொட்டிகள் வெளியீடு

நெடுந்தீவு, ஜன. 30

யாழ். மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டப்பிரிவு தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு விடயங்களை எடுத்துக் கூறும் சுவரொட்டிகளை 'யூனிசெவ்' உதவியுடன் வெளியிட ஆரம்பித்துள்ளது.

கொழும்பில் இருந்து வரும் சுவரொட்டிப் படங்கள் சிங்கள கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதால் வட பகுதியில் உள்ள இன்றைய தலைமுறை தமது கலாசாரத்தைப் பேணக்கூடியதாக இந்தச் சுவரொட்டிகள் தயாரிக்கப்படுவதாக மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

தற்சமயம் 'பெண்பிள்ளைகளைப் போற்றி வளர்ப்பீர்' 'விலங்கு விசர் நோய்' குறித்த இரு சுவரொட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஐ-11 1)




# FAST Communication
## ஃபாஸ்ட் கொமினிக்கேசன்

தனது முதலாவது அகவையைப்பூர்த்தி செய்கின்றது இன்று!

எங்கள் ஒரு வருடப் பூர்த்தியை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்துவிட்ட ஆண்டில் எமக்கு ஒத்துழைத்துதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ இன்று மட்டும் உள்வரும் அழைப்புக்கள் அனைத்தும் இலவசம் என்பதனை அறியத் தருகின்றோம்.

உங்கள் தேவையே எங்கள் சேவை!

Tel. 021 - 2591 Fax: 009421 - 2591

இல. 392. பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(73210)


# யாழ். நீதிமன்ற வளாகம் உலக வங்கி நிதியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள யாழ். நீதிமன்ற வளாகம் உலக வங்கியின் உதவியுடன் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலைகள் தற்பொழுது நடைபெற்றுவருவதாக யாழ் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் போன்றவற்றின் கட்டடங்கள் கடந்த கால வன்செயல்களினால் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இதனால் குறிப்பிட்ட நீதிமன்றங்களின் அமர்வுகள் அடிப்படை வசதிகளின்றித் தனியார் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவருகின்றன (ஐ-5-9)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின்
முன்னாள் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளரும் தற்போது மேலதிகப் பொது முகாமையாளருமாகிய.
திரு. வே. இராஜேந்திரன்
அவர்களின் அன்பு மனைவியார்

## திருமதி, சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை மின்சார சபை.
கட்டமைப்புப் பொறியியலாளர் பிரிவு,
திரு. இரத்தினவடிவேலும் அவரது
ஊழியர்களும். (73224)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையின் முன்னாள் வடமாகாண
பிரதிப் பொது முகாமையாளரும்,
தற்போதைய இலங்கை மின்சாரசபை
மேலதிகப் பொது முகாமையாளருமாகிய
திரு. வே. இராஜேந்திரன்
அவர்களின் பாசமிகு துணைவியார்

## திருமதி சகுந்தலாதேவி இராஜேந்திரன்

அவர்கள் காலமானதையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு, அவர்களின் துயரில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்,

கரசன் எலெக்றிக்கல்ஸ் ஸ்தாபனத்தார்,
யாழ்ப்பாணம்.
(73219)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

[உப தபாலதிபர் - செட்டிய குறிச்சி, பூநகரி]

பூநகரியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் காலமானார்.

அன்னார் பிள்ளையம்மாவின் அன்புக் கணவரும், சிறீரஞ்சினி, சிறீரதி. சிறீராகினி, சிறீரங்கநாதன், சிறீவரதராஜன், சிறீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகராசா [C. W. E.], நாகரத்தினம் [C. T. B.] Dr. வேலாயுதபிள்ளை, அன்னலிங்கம் [C. T. B] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜெயபுரம், கிளிநொச்சியில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Dr. வேலாயுதபிள்ளை
நீர்வேலி மத்தி. [73185]

## திருமதி அரியநாயகம் இராசம்மா

முனி கோவிலடி, இருபாலை கிழக்கு, கோப்பாயைச் சேர்ந்த திருமதி அரியநாயகம் இராசம்மா நேற்று முன்தினம் (28-01-2000) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் (28-01-2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் இருபாலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:-
த. பெர. அரியநாயகம்
(கணவர்)

முனி கோவிலடி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய். (73204)

# பொதுமக்கள் மீதான தாக்குதல்களை இருதரப்புமே தவிர்க்க வேண்டும்

## பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

அர்த்தமற்ற இந்த யுத்தத்தில் பொதுமக்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பாரும் இதை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் அன்ரன் பொன்னையா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். நகரின் கரையோரப் பகுதிகள் மீதும் தென்மராட்சியின் சில பிரதேசங்கள் மீதும் அண்மைய நாள்களாக ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

முன்னர் மடு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களுக்கு போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புமே பொறுப்பாளிகள் என்பதை உணராது மாறி மாறி குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இன்று தமது சொந்த இடங்களில் வாழ முடியாது தொழில்களை மேற்கொள்ள வழியின்றி வாடும் மக்கள் மீது நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக அவர்கள் கண்டனக் குரல் எழுப்பி புரட்சி ஒன்று நடத்தும் நிலைக்குத் தள்ளப்படும்போதுதான் உண்மைகள் வெளிவரும்.

அண்மையில் அரியாலை தபாற் கட்டைச் சந்திப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் கந்தையா குணசேகரம் என்பவர் பலியாகி உள்ளார். இது போன்ற தாக்குதல்களைக் கண்டிப்பதுடன் இவற்றை நிறுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன். பலியானவரின் குடும்பத்தினருக்கும், துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விளையாட்டரங்கு

### 'விக்ரம் – ராஜன் – கங்கு' ஞாபகார்த்த கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.30

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் 'விக்ரம் - ராஜன் - கங்கு' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அணிக்கும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் இடையில் நடைபெறும் இந்த இறுதியாட்டம் 40 ஓவர்களைக் கொண்டதாக இருக்கும்.

யாழ் பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், ஜொலிஸ்ரார்ஸ் வி.க., மானிப்பாய் பரிஷ் வி.க. ஆகிய அழைக்கப்பட்ட நான்கு கழகங்களுக்கு இடையேயான இந்தச் சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆறு லீக் போட்டிகளில் தலா இரண்டு போட்டிகளை வென்று இந்த இரு அணிகளும் இறுதி ஆட்டத்துக்கு தெரிவாகின.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். கிரிக்கெட் சபையின் தலைவர் எஸ்.பிரஜீவனும் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பி.கமலநாதனும் கலந்துகொள்வர். (ஐ-4)

### எல்லே சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ். பிரதேச செயலகப்பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான எல்லே சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிமுதல் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற உள்ளன.

இச்சுற்றுப் போட்டியின், முதல் சுற்று ஆட்டங்களில் விளையாடும் அணிகளின் விவரம் வருமாறு:-

* சென்றொக்ஸ் வி.க எதிர் சென். நீக்கலஸ் வி.க
* ஜெட் லைனேர்ஸ் வி.க எதிர் குருநகர் வி.க
* பாரதி வி.க எதிர் யுத்காமல் வி.க
* சென். அன்ரனீஸ் வி.க எதிர் கிறீன்பீல்ட் வி.க.

(ஜ-4-8)

### கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.30

விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டக் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவு ஆட்டங்கள் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணிக்கு - பல்கலைக்கழக அணி எதிர் பமிலியன்ஸ் வி.க. அணி.
* பிற்பகல் 4.30 மணிக்கு - கிராஸ்கொப்பர்ஸ் வி.க. அணி எதிர் யுத்காமல் வி.க. அணி.

(ஜ-4-8)

### பண்ணிசை போட்டி

யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவால் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களில் நடைபெறும்.

இறுதிப்போட்டி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசு மகா சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே மூன்று பிரிவுகளைக் கொண்டனவாக அமையும். போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அதிபர்களிடமிருந்தோ அல்லது யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவிலிருந்தோ பெற்று பெப்ரவரி 11ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-9)

### கண்காட்சியில் மாணவன் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற கண்காட்சிப் போட்டியில் கலந்து கொண்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவர் ஒருவர் வாயுக் குடுவை ஒன்று வெடித்ததில் காயமடைந்தார்.

கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த செல்வநாயகம் ஜீவபிரதாப் (வயது 18) என்ற ஜ.சி.த உயர்தர வகுப்பு மாணவனே காயமடைந்தார்.

கண்காட்சி ஆரம்பமாவதற்கு முன் பரீட்சார்த்த வேலைகளில் ஈடுபட்டிருந்த போது வாயுக் குடுவை வெடித்த போத இவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ-9-15)

### பருத்தித்துறை துறைமுகத்தில் 3 கப்பல்கள்

நெல்லியடி,ஜன.30

கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களுடன் புறப்பட்ட மூன்று கப்பல்கள் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தன.

'கிரிந்த' கப்பலில், இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கு பல்வகை வகைகளும் 'ஹெறந்தல' கப்பலில் சீமெந்தும் 'இந்துருவவலி' கப்பலில் கட்டடப் பொருள்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

காலநிலை காரணமாக முழு இழுவைப் படகுகளையும் சேவையில் ஈடுபடுத்த முடியாமையால் மந்த கதியில் பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. (இ-109-133)


**ராஜா**
யாழ்ப்பாணம்.
ரசிகர்களே!
கடைசிவாரமாக
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
**அவள் வருவாளா**
10.30, 2.00, 5.00
(C/10845)

**லிபேட்டி**
அச்சுவேலி
இன்று மட்டும்
**விஜயகாந்த்**
(இரட்டைவேடம்)
மீனா, பிரபுதேவா
நடித்த
*வானத்தைப் போல*
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P 070-212223
070-212678
(73044)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
*சரத்குமார்*
*தேவயானியின்*
* சூரிய வம்சம் *
(ரீலீஸ்)
காட்சிகள்:- 10.30, 2.30
(புதிய நேரம்)
(C/10861)

யாழ்ப்பாணம்
**ஸ்ரீ செல்வா திரையில்**
தினசரி 10.30, 2.30
(ப.நே)
விஜயகாந்த்
(இரட்டைவேடம்)
மீனா, பிரபுதேவா
நடித்த
வானத்தைப் போல
புதிய வெளியீடு (நேரடி CD)
(பெண்களுக்கு இடவசதி உண்டு) (73223)

**தேவை**
தேநீர் தயாரிப்பாளர்
(ரீ மேக்கர்)
தேவை.
தொடர்பு:-
*அபீஸ் கோப்பி (B) பார்*
கஸ்தூரியார் . வீதி,
யாழ்ப்பாணம்.
(73214)

**NEW BRIGHT**
கல்வி நிலையம்
யா/மாட்டின் வீதி.
பிரத்தியேக வகுப்புக்கள்
*கணக்கீடு*
A/L 2001, Tue. 4, Sat. 2.45
*பங்குடமை*
ஆரம்பம் 01.02.2000
Mr.S.Rajani
*LOGIC*
ஆரம்பம் 04.02.2000 (Fri.)
*A/L 2001 (4-5)*
*A/L 2002 (5-6)*
Mr.இரா.ரமணன்
(73215)

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நடத்தும் பண்ணிசைப் போட்டி - 2000**

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவு மென 03 பிரிவுகளைக் கொண்ட பண்ணிசைப் போட்டியை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களிலும், இறுதிப்போட்டியை யாழ்ப் பாணத்திலும் நடத்தி மகா சிவராத்திரி தினத்தன்று பரிசளிப்பினை நடத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அதிபர்களிடமிருந்தோ அன்றேல் யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியிலிருந்தோ ரூபா 20/- ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி :- 11.02.2000.

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**
(C/10858)


## மரண அறிவித்தல்கள்

### செல்வராஜா நாகேஸ்வரி

கில்னர் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட செல்வராசா நாகேஸ்வரி நேற்று (29.01.2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்வராஜா (யாழ். போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் உதயகுமாரின் (யாழ். போதனாவைத்தியாசலை) அன்புத் தாயாரும் விஜிதாவின் அன்பு மாமியாரும் தனுஷன், தர்ஷினி, பிரியா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2000) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செ. உதயகுமார்**
**(மகன்)**

கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.
(73220)

### செல்வி தங்கலட்சுமி நமசிவாயம்

(முன்னைய மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை ஓய்வுபெற்ற ஆசிரியை - English அக்கா)

மல்லாகம் நீதிமன்ற வீதியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கலட்சுமி நமசிவாயம் 28.01.2000 அன்று ரொரன்ரோவில் காலமானார்.

அன்னார் வைத்தியர் நமசிவாயம் - கயிலாயம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரஸ்வதி, அருணாசலம் மற்றும் ஞானலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), நடராசா (ஓய்வுபெற்ற அஞ்சலர்), நந்திராசா, கனகசோதி (வள்ளி - லண்டன்) ஆகியோரின் அன்பான சகோதரியும் சிவசுப்பிரமணியம், புவனேஸ்வரி, இராசேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் மாலினி இராஜேஸ்வரன் (இந்தியா), சிவதில்லைநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புமிகு சிறியதாயும் செந்தூரணி, பாஸ்கரன் (சுவிஸ்), பதுமினி (கொழும்பு), பாலசெந்தூரன், கஜேனாஜினி (அச்சுவேலி), பார்த்திபன் (லண்டன்), லட்சுமிதீபா ஆகியோரின் அன்புள்ள மாமியாரும் பிரேமலதா (கனடா), இந்திராகாந்தி (இந்தியா), பிரமசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நீலியம்பனை,
மல்லாகம்.
(73213)

தகவல்:
**ந. நடராசா.**

### கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை அவர்கள் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் இராசமணி, சோமசுந்தரம் (இந்தியா), சேதுபதி (இந்தியா), நவரத்தினம் (இந்தியா), முத்துக்குமார் (இராமநாதபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோவிந்தபிள்ளை, விமலா, கமலாதேவி, நல்லம்மா, சிவகாமசுந்தரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28/01/2000 அன்று நெடுந்தீவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

28/01/2000 அன்று நடைபெற்ற கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

தகவல்:
ஆ.க.கோவிந்தபிள்ளை
(ஓய்வுபெற்ற தொ.நு.உத்தியோகத்தர்)
நெடுந்தீவு

(73225)

### திருமதி மேரி அமிர்தம்மா பக்கசு

(மேரி அக்கா)

பருத்தித்துறை யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் ஆரம்பப் பிரிவின் இளைப்பாறிய தலைமை ஆசிரியையும் தும்பளையைச் சேர்ந்த காலம்சென்ற திரு.திருமதி வேல்தனின் கடைசி மகளுமான திருமதி மேரி அமிர்தம்மா பக்கசு மறுமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அவரின் நல்லடக்க ஆராதனை பருத்தித்துறை வெஸ்லி லேனில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (30.01.2000) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பருத்தித்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:-
வணக்கத்திற்குரிய பிதா
**சதீஸ்.**

*வெஸ்லி ஒழுங்கை,*
*கல்லூரி வீதி,*
*பருத்தித்துறை.*
(c/10863)

# பேச்சு முறிந்த இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்

## டிக்ஷித் கூறுகிறார்

புதுடில்லி,ஜன.30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதாக இருந்தால் 95 ஆம் ஆண்டு பேச்சு முறிந்த இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சுச் செயலாளரும் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவருமான ஜே.என்.டிக்ஷித் மேற்கண்டவாறு கூறினார்.

புதுடில்லியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தக் கூடியதான தீர்வு ஒன்றை இன்றைய அரசு முன்வைக்கவேண்டும். விடுதலைப் புலிகளும் அதனைப் பரிசீலனைக்கு எடுக்கவேண்டும்.

நியாயமான தீர்வை அரசு முன்வைக்குமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் விடுதலைப் புலிகள் நேரடியாகப் பங்குபற்றாத எந்தத் தீர்வும் பயனளிக்கமாட்டாது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா வருவதற்காக மடுப் பகுதியில் ஆயிரக்கணக்கானோர் காத்திருப்பு

வவுனியா.ஜன.30

வவுனியா நகருக்கு வருவதற்காக வன்னியிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மடு மற்றும் தம்பனைப் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக காத்திருக்கின்றனர்.

கடந்த செவ்வாய், வெள்ளி ஆகிய இரு நாள்களும் வவுனியாவுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் வந்த இவர்களுக்கு இதற்கான அனுமதி படையினரால் வழங்கப்படவில்லை.

நேற்றுமுன்தினம் வன்னிக்குச் செல்வதற்கு 340 பேர் அனுமதிக்கப்பட்ட போதும் வவுனியாவுக்கு வருவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. (இ-5-164)

### யாழ். ஆஸ்பத்திரிச் சூழலில்

# பாதுகாப்பு வலயம் அமைக்கும் அவசியம் உடனடியாக இல்லை

## செஞ்சிலுவைப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

"யாழ். ஆஸ்பத்திரிச் சூழலைப் பாதுகாப்பு வலயமாக வேண்டிய தேவை உடனடியாக இல்லை" என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இது விடயமாகப் பலதரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் -

பாதுகாப்புப் படையினரினதும், விடுதலைப் புலிகளினதும் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் ஆஸ்பத்திரிச் சூழலை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யத் தேவையில்லை என்றும் -

தேவை ஏற்படும் பட்சத்தில் இரு தரப்புடனும் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

### வவுனியா நலன்புரி நிலையங்களில்

# இடம்பெயர்ந்தோருக்கான கொடுப்பனவு குறைப்பு

## உலர் உணவு வழங்க ஏற்பாடு

வவுனியா,ஜன.30

வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணக் கொடுப்பனவை அரைவாசியாக குறைத்து உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் 14 நலன்புரி நிலையங்களில் 10ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நாளொன்றுக்கு வளர்ந்தவர்களுக்கு 35 ரூபா வீதமும் சிறியவர்களுக்கு 20 ரூபா வீதமும் பணம் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் சமைத்த உணவு வழங்கப்பட்டு வந்தது.

இந்த உணவு வழங்கலில் இடம்பெற்ற மோசடிகளையடுத்து உணவுக்குப் பதிலாக பணக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது.

இனிமேல் இக்கொடுப்பனவு அரைவாசியாகக் குறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக உலர் உணவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. - (ஐ-5)

# அ.அட்டைக்கு விண்ணப்பிப்போர் கலர்ப் படங்களைத் தவிர்க்குக!

## விசேட அ.அட்டைப்பிரிவினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

விசேட அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பம் செய்பவர்கள் கலர்ப்படங்களைத் தவிர்த்து கறுப்பு வெள்ளை படங்களுடன் விண்ணப்பிக்குமாறு விசேட அடையாள அட்டைப்பிரிவு முகாமையாளர் எஸ்.திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

கலர்ப்படங்கள் ஒட்டப்பட்ட அடையாள அட்டைகளை கவரிடும் இயந்திரத்தில் போடும்போது அவை சேதம் அடைவதாகவும் -

எனவே அதைத்தவிர்க்கும் பொருட்டு தம்முடன் ஒத்துழைக்குமாறும் -

அவர் கேட்டுள்ளார். (ஐ-5)

### வன்னியிலும் கிழக்கிலும்

# புலிகளின் பகுதிக்கு இலவச பாடநூல்கள்

யாழ்ப்பாணம்,ஜன.30

வன்னியிலும், கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கான இலவச பாடநூல்கள் சில தினங்களில் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டுக்கான இலவச பாடநூல்களும் வன்னி மற்றும் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கான பாடநூல்களும் - பாடசாலைகள் தொடங்கி ஒரு மாதம் கழிந்துவிட்ட நிலையிலும் - அனுப்பிவைக்கப்படாதது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரணவுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து பாடநூல்களை மேற்படி பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு தெரிவித்துள்ளன.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு நேற்று 32 ஆயிரம் பாடநூல்களை அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு பெப்ரவரி 5ஆம் திகதி 10 லொறிகளில் பாடநூல்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (ஐ-5-)

# மாகாண சபை உறுப்பினராக செல்லச்சாமிக்கு நியமனம்

மத்திய மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினராக இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமியை நியமிப்பதற்கு கட்சித் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.

தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமானின் இடத்துக்கு புத்திரசிகாமணி நியமிக்கப்பட்டதை அடுத்து மத்திய மகாண சபையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு எம்.எஸ்.செல்லச்சாமி நியமிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடத்துக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் யூனியன் உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதை அடுத்தே செல்லச்சாமி அந்த இடத்துக்கு நியமிக்கப்படவுள்ளதாக கூறப்பட்டது. (இ-6)

### நிலனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் மிக நீண்டகாலமாக நெருங்கிய உறவுகள் உள்ளன. இந்திய அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பாதிக்காது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-6-5)

### மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.30

மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று பெப்ரவரி 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கொழும்பு மனித உரிமைகளுக்கான இல்லத்தில் பணியாற்றி வரும் சட்டத்தரணி டெனிஸ் சாந்தன் ஞானதாஸ் கலந்து கொள்கின்றார்.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தத்தமது வரையறைக்கு உட்பட்ட அளவில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கும் செய்யக்கூடிய சாத்தியமான விடயங்களைப் பற்றியும் இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளது.

அத்துடன் பின்வரும் விடயங்கள் பற்றியும் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன:-

* வரலாற்று நோக்கில் மனித உரிமைகள் சட்டம்.

* இலங்கையில் மனித உரிமைகள் குறித்த இன்றைய நிலை.

(இ)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.மேல் நீதிமன்றத்தை வீரசிங்கம் மண்டபத்தில் தற்காலிகமாக இயங்க வைப்பது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவும் கூட்டுறவுச் சபையின் தலைவர், இயக்குநர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பிரதம நீதியரசருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-3-5-9)

INSTITUTE OF INFORMATICS STUDIES

புலமைப் பரிசில் முடிவுகள்

எமது நிறுவனத்தால் யாழ். மாவட்டத்தில் 20/01/2000இல் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைக்கான முடிவுகள் யாவும் இன்று வெளியிடப்பட்டுள்ளன. எமது தலைமை அலுவலகத்தில் இன்று தொடக்கம் பரீட்சை முடிவுகளைப் பார்வையிடலாம்.

பரீட்சார்த்திகளுக்கான தனிப்பட்ட முடிவுகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இயக்குநர்
IIS.

(C/10862)

### சுகாதார அதிகாரி மீது தாக்கு:

# கைதானவர் நீதிமன்றில் ஆஜர் பெப். 11 வரை விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,ஜன.30

கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணியில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கடந்த புதனன்று கோண்டாவில் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைதான சந்தேக நபர் நேற்று யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

கோப்பாய் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட கோண்டாவிலைச் சேர்ந்த சுதாகரன் என்ற பிரஸ்தாப சந்தேக நபரை பெப்ரவரி பதினொராம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-152)

### முன்னாள் அமைச்சர் மரணம்

கொழும்பு,ஜன.30

மலைநாட்டின் மூத்த அரசியல்வாதியும் ஐ.தே.க. அரசில் அமைச்சராகப் பணியாற்றியவருமான ஈ.எல்.சேனநாயக்க (வயது 79) நேற்றுக் காலமானார்.

இவர் ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றின் சபாநாயகராகவும் பணியாற்றி உள்ளார். பின்னர் வடமத்திய, சப்பிரகமுவ மாகாணங்களின் ஆளுநராகவும் பணியாற்றினார். (ஐ-6)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி சர்மிளா ராஜேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

### சகுந்தலாதேவி ராஜேந்திரன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

விஞ்ஞான பீட
2 ஆம் வருட மாணவர்கள்.

(73180)

## மரண அறிவித்தல்

### A.P குணரட்ணம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை போல் குணரட்ணம் நேற்று (29.01.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற என்.அந்தோனிப்பிள்ளை மற்றும் ஞானபூரணம் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் திருமதி ரூபி குணரத்தினத்தின் அன்புக் கணவரும் ரெணி, அர்ச்சுனா, குணரட்ணம், றேவேணி, டிலோன் குணரட்ணம்(U.K) றியோன்சி குணரட்ணம்(U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரெணி ஜக்குலினின் அன்பு மாமனாரும் ரெணி செலுமியோலின் அன்புப் பேரனும் A.ஹெலன் திரேசா, A.E ராஜேந்திரம், A.மரியநாயகம், A.புஷ்பராணி, E.ரஞ்சிதராணி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் அடக்க ஆராதனை 31.1.2000 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதியநேரம்) நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரூபி குணரட்ணம்
(மனைவி)

இல.26, சுவாட்ஸ் லேன்,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

(C/10868)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.